உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 37 | பிங்கள - மார்கழி - 10—1—78 | இதழ் 2

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. – சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

சேயை வளர்க்கும் அரசு — தாயையும் வளர்க்கட்டும்

நம்பிக்கை நட்சத்திரம் :

கர்நாடக இசை வளர்ச்சிக்கு ஒரு புதுப்பாதை திறந்துவிடப் பெற்றிருக்கிறது ; ஆம். சென்னையில், தமிழ் இசைச் சங்கத்தின் 35 ஆவது ஆண்டு இசை விழா நிகழ்ச்சிகளைத் தொடங்கிவைத்த தமிழக முதல்வரின் அறிவிப்பினையே குறிப்பிடுகின்றோம். கலைத் தொடர்புடைய முதல்வரின் அறிவிப்பு, கர்நாடக இசை வளர்ச்சியில், குறிப்பாகத் தமிழிசை வளர்ச்சியில் நம்பிக்கை நட்சத்திரமாக அமைந்தது. நாதஸ்வரக்கலை வளர்ச்சி, கர்நாடக இசையில் புதிய ராகங்களைக் காணும் முயற்சி, புதிய தமிழ் இசைப் பாடல்களின் புனைவு இவற்றிற்கு அரசின் உதவியும், பரிசுகளும் அறிவிக்கப் பெற்றுள்ளன.

நல்லுணர்ச்சிக்குப் பாராட்டு :

தாங்கள் கற்கும் பள்ளிக்கல்விக்கு இடையூறு இல்லாது அத்துடன் நாதஸ்வர இசையைக் கற்க விரும்பும் தகுதி வாய்ந்த மாணவருக்குத் தமிழக அரசு திங்கள்தோறும் ரூபாம் ஐந்நூறு உதவித்தொகை வழங்கும்; அடுத்துத் தமிழ்மொழியில் சிறந்த இசைப்பாடல் புனையும் ஒருவருக்கு ஆண்டுதோறும் ரூபாய் ஐயாயிரம் பரிசு வழங்கப்பெறும். மூன்றாவது, கர்நாடகஇசையில் புதிய ராகங்களைக் கண்டுபிடித்துத் தருவோருக்கும் அவ்வாறே பரிசு ரூபாய் ஐயாயிரம். அரசின் இவ்வறிவிப்பு இசை உலகில் புதிய தெம்பூட்டும் என்பதில் ஐயமில்லை. நாளுக்குநாள் அருகி வரும் நாதஸ்வரக் கலையும், ஊற்றம்பெறுதிருக்கும் தமிழிசையும் வளர்ச்சிபெற உதவும் அரசின் நல்லுணர்ச்சியை நாமும் பாராட்டுகின்றோம்.

அழியாத உண்மை :

தமிழ், இயல் இசை கூத்து என்னும் முக்கூறுகளையுடையது. முத்தமிழ் என்பதே வழக்கு. இயல் என்பது இயல்பாக உள்ளத் தெழும் எண்ணம் அல்லது கருத்து எனப்பொருள்படும். இசை என்பதுசொல்; உள்ளத்தெழுந்த கருத்தினை ஓசையுடன் வெளிப் படுப்பது இசை. இசையுடன் பாவங்களும் கூடுவது கூத்து. முத்தமிழிலும் அரிய நூல்கள் பல இருந்து அழிந்துபோயின; இருப்பன சிலவே. தமிழ் இசை நீண்ட பெரிய வரம்புகளையும், வரலாற்றையும் உடையது. இசை வரம்புகளை இன்றும் அழியாது போற்றிப் பாதுகாப்பன, தமிழில் உள்ள தெய்விகத் திருப் பாடல்களே என்பது மறுக்க முடியாத உண்மை.

கர்நாடகம் எது ?

பழங்காலத்தில் பாரதத்தில் வழங்கிய இசைக் கூறுகளை எல்லாம் இந்திய இசை எனவே குறித்துள்ளனர். இடைக்காலத் தில் இந்திய இசையினைக் கர்நாடக இசைஎன்றும், இந்துஸ்தானி இசை என்றும் இரண்டாக வழங்கத் தொடங்கினர். தென்னாட்டு இசை என்ற பொருளிலேயே கர்நாடக இசை என்னும் குறியீடு வழங்கப்பெற்று வந்துள்ளது. தென்னாட்டு மொழிகளுக்குத் திராவிடம் எனப்பொதுக்குறியீடு அமைந்ததுபோல, தென் னிந்திய இசைவகைகளுக்கு வடநாட்டார் இட்ட பொதுக் குறியீடாகக் 'கர்நாடக இசை' என்ற பெயர் அமைந்திருக்க வேண்டும் எனலாம். மொழி, வேறு வேறாக இருந்தாலும்,

ஊடுருவி நிற்கும் பண்களும் ராக தாளங்களும் கர்நாடக இசை என்ற பொதுக் குறியீட்டுக்கு அரண் செய்தன. கர்நாடக இசை, இசை உலகில் வழங்கும் பன்னிரண்டு சுரத்தானங்களை ஆதாரமாகக்கொண்டு அமைக்கப் பெற்ற எழுபத்திரண்டு மேள கர்த்தாக்களைக் கொண்டு இயங்குவது.

சாம்பமூர்த்தி சாற்றுகிறார் :

கர்நாடக இசைஎன்ற குறியீடு இன்று சங்கீத மும்மூர்த்திகள் எனப்படும் ஸ்ரீ தியாகராஜர், ஸ்ரீ முத்துசாமி தீட்சிதர், ஸ்ரீ சியாமா சாஸ்திரிகள் முதலியோர் பாடிய கீர்த்தனங்கள் என்றே கருதப் பட்டு வருகிறது. ஆனால் கர்நாடக இசையின் உண்மையான வடிவங்களை அழியாது தாங்கி நிற்பன தேவாரத் திருமுறைகளே யாகும். இதுபற்றி இசைப் பேராசிரியர் திரு. பி. சாம்பமூர்த்தி அவர்கள் கலைக் களஞ்சியத்தில் கூறும் சில கருத்துக்களைக் கீழே தருகிறோம்.

> "கருநாடக இசையில் தேவாரப் பண்களே மிக்க பழமை யான உருப்படிகளாகும். அவை பக்தி ராகங்களில் அமைந்திருந்ததாலும், கவர்ச்சிகரமான வர்ண மெட்டுக் களில் அமைந்திருந்ததாலும் எல்லோரும் அவைகளைப் பாட ஆரம்பித்தனர். திவ்வியப் பிரபந்தம் வேதத்தைப் போல் ஓதப்பட்டு வந்ததாகத் தெரிகிறதே தவிர, அது தேவாரப் பண்களைப்போல், இராகத்திலும் தாளத் திலும் அமைத்துப் பாடப்பட்டனவாகத் தெரியவில்லை. அப்படி இருந்திருந்தால் அந்தச் சம்பிரதாயமும் வந்திருக்கும்."

இதுவல்ல அது :

மேற்கண்ட தொடர்கள் ஏழிசையாய், இசைப்பயனும் நிற்கும் சிவபரம்பொருள்மேல் பாடப்பெற்ற தேவாரப் பதிகங்களே, கர்நாடக இசைவடிவின் மூலக் கூறுகளாகத் திகழ்பவை என்பதை ஐயந்திரிபற விளக்கக் காண்கின்றோம். ஆனால், தற்காலத்தே, பல்லவி, அநுபல்லவி, சரணம் என்ற உறுப்புக்களுடன் கூடிய கீர்த்தனங்களே கர்நாடக இசைப்பாடல்கள் என்பது போன்ற கருத்து நிலவுகின்றது. ஸ்ரீ தியாகராஜர் (1767—1847) காலத் துக்குப் பின்னரே இவ்வாறான கருத்து உருப்பெற்றிருக்க வேண்டும் என அறியமுடிகிறது. வெளிப்படையாகக் கீர்த்தனங் களுக்குரிய இம் மூன்று உறுப்புக்களும் உடைய பழந்தமிழ்த்

தேவாரப்பதிகங்கள் இல்லையாயினும், இவ்வமைப்பில் தேவாரப் பாசுரங்கள் ஏராளம் உள்ளன. குறிப்பாகத் திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய திருஅங்கமாலைத் திருப்பதிகத்தைக் குறிப் பிடலாம். 'தலையே நீ வணங்காய்' என்பது பல்லவிபோல் நின்று, அடுத்த பகுதி அனுபல்லவியாக அமைய, அதன் இறுதி யில் மீண்டும் 'தலையே நீ வணங்காய்' என்ற பல்லவிப்பகுதி இணைந்தே நடையிடுவதை உற்று நோக்கினால் இவ்வழகிய அமைப்பு நன்கு புலனாகும். இதில் இன்னும் ஒரு வேடிக்கை. இத்தகு கீர்த்தனங்களைப் பிற்காலத்தே இயற்றிய பலரும், தம் தாய்மொழியாகிய தெலுங்கில் அவற்றை இயற்றியதனால், கர்நாடக இசை என்பதே தெலுங்குக் கீர்த்தனங்கள்தாமோ என்னும் மயக்கத்தையும் உண்டாக்கின. தமிழிலும் கி. பி 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் நந்தனார் சரித்திரக்கீர்த்தனைகள், இராம நாடகக் கீர்த்தனைகள் போன்ற நூல்கள் சில தோன்றின.

எனவே, கர்நாடக இசை என்பது தென்னாட்டு இசை மரபு என்பதும், மொழி கடந்து வாழும் வல்லமை இதற்கு உண்டு என்பதும், இதன் மூலக் கூறுகளை உள்ளடக்கி நின்று பாது காத்த பெருமை தேவாரத் திருமுறைகளுக்குரியன என்பதும், கீர்த்தனங்கள் பிற்கால இசைவகை என்பதும் நன்கு புலனா கின்றன. எனவே, கர்நாடக இசையின் மூலக் கூறுகளைப் பண் அடைவுகளில் தாங்கி நிற்கும் தேவாரத் திருமுறைகளின் உண்மையான வளர்ச்சியே கர்நாடக இசை வளர்ச்சி என்பது உறுதியாகிறது.

வேர்க்காலுக்கு நீர் :

தேவாரத் திருமுறைகளை உரிய பண் அடைவுகளோடு கற்றுத் தமிழ் இசையை வாழவைக்க வேண்டிய கடமை தமிழர் களுக்கு உரியது. முத்தமிழ் வளர்ச்சியில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டு, நாளும் இன்னிசையால் தமிழ் வளர்க்கும் தருமை யாதீனம் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாகத் தேவாரப் பாடசாலை நிறுவி முறையாகத் திருமுறைவாணர்களை உருவாக்கித் தமிழகத்துத் திருக்கோயில்களிலெல்லாம் தேனூறு பாய்ச்சி வருகிறது. ஐந்து ஆண்டுகள் தேவாரம் பயிலும் மாணவர்களுக்கு உணவு, உடை, உறையுள் யாவும் இலவசமாய் அளித்து, மொழி அறிவும் இசை அறிவும் வழங்கித் தமிழிசை வளர்ச்சியில் உரிய பங்காற்றி வருகிறது.

தமிழறிந்த இசை நெஞ்சம் :

இசைத் தொண்டுக்கு மாணாக்கர்களை உருவாக்குவது மட்டும் போதுமா? திருமுறைத் தொண்டாற்றியவர்களுக்கு ஊக்கமூட்ட

வேண்டாமா? அப்போதுதானே நலிந்துவரும் இத்துறையில் இளைஞர்கள் ஈடுபாடு கொள்வர். தருமைக் குருமணியின் தமிழறிந்த இசை நெஞ்சம், அப்பர் அவதரித்த திருவாமூரிலும், ஞானசம்பந்தர் அவதரித்த சீகாழியிலும், திருமுறைத் தொண்டாற்றிய ஓதுவாமூர்த்திகளுக்கு ஆண்டுதோறும் 'திருமுறைக் கலாநிதி' என்றபட்டமும் பொற்பதக்கமும் வழங்கிப் பொன்னுடை போர்த்து ரூபாய் ஆயிரம் பணமுடிப்பும் வழங்கிப் பத்தாண்டுகளுக்கு மேலாகத் தமிழ்இசை நலம் பேணிவருவது சைவத் தமிழ் உலகம் நன்கு அறிந்ததே.

நடக்குமென நம்புகின்றோம் :

தமிழக முதல்வர் அவர்களைப் பாராட்டி, ஞானசம்பந்தம் ஒரு வேண்டுகோள் வைக்கிறது. தமிழிசை வளர்ச்சியில் அடித்தளமாக விளங்கும் திருமுறை வாணர்களைத் தமிழகத் திருக்கோயில்கள் யாவற்றிலும் நியமனம் செய்யுங்கள். உலகியல்வாழ்க்கைக்குத் தேவையான ஊதியம் வழங்குங்கள். திருமுறை கற்கும் மாணவர்களுக்கும் தமிழக அரசின் பூரணமான உதவிபெற உரிமையுண்டே! சேய்களுக்குச் சிறப்புச் செய்கையில், தாயர்களையும் சிறப்பித்தல் கடமையல்லவா தமிழகமுதல்வர்அவர்கள், கர்நாடக இசையின் தாயாக விளங்கும் தேவாரத் திருமுறை வளர்ச்சிக்கும் விரைவில் தமிழக அரசின்பெருந்துணை உண்டு என அறிவித்து, தமிழிசை வளர்ச்சிக்குப் பரிபூரணமாக உதவுவார் என்று நம்புவோமாக! சேயை வளர்க்கும் அரசு தாயையும் வளர்க்குமாக!

பார்வையாளர் குறிப்பு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம்

ஸ்ரீ ராதாரமணாய நம:

இருநூறு பக்த ஜனங்களுடன் ஸ்ரீ சீகாழி பகவானின் தரிசனம் கிடைத்தது எவ்விதம் ஞானசம்பந்தருக்கு ஈசுவரர் ஞானப்பால்தந்து அருளினரோ அவ்விதமே நம் அனைவருக்கும் கூட பக்திரசத்தின் அருளை நிரந்தரமாக ஈசுவரன் வழங்கி வருவார் என்பதே என்னுடைய பிரார்த்தனை. இங்கு இருக்கும் எல்லா அலுவலர்களும் சாந்த சுபாவம் உள்ளவர்களாக இருக்கின்றனர்.

(ஒ-ம்) ஜகத்குரு,
புருஷோத்தமகோம்

30—12—77.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

1—2—78 இல் நிகழ இருக்கும்
ஸ்ரீ தாயுமானவர் நினைவுநாளை முன்னிட்டு
வழங்கியருளிய

ஆசியுரை

மொழி வழக்கைப் பேச்சு வழக்கு என்றும், செய்யுள் வழக்கு என்றும் இருவகையாகக் கூறுவர் இலக்கண நூலார். பேச்சு வழக்கு என்பது எல்லோராலும் பேசப்படும் மொழி நடையாகும். செய்யுள் வழக்கு என்பது செய்யுளில் மட்டும் பயிலப்பட்டு, படித்தவர்களால் மாத்திரம் கையாளப்படும் மொழி நடையாகும். இவ்விருவகை வழக்குகளும், ஒன்றனை யொன்று அகலாது இணைந்தே செல்லும் இயல்புடையன. பேச்சு வழக்கில் உள்ளவை செய்யுளிலும், செய்யுள் வழக்கில் உள்ளவை பேச்சிலும் இடம்பெறுதல் உண்டு. மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படும் பல செய்யுள்தொடர்கள் இவ்வாறு பேச்சுநடையில் எல்லோராலும் கையாளப் பெறுவதையும், அவ்வாறே பேச்சுவழக்கில் உள்ள சில சொற்றொடர்கள் செய்யுளில் வழங்கப்பெறுவதையும் காணலாம். சிறந்த கருத்துக்களை உள்ளடக்கிய அத்தகைய செய்யுள்தொடர்களை மக்கள் இன்ன நூலில் கூறப்பட்டுள்ளவை என்பதையும் இன்னாரால் கூறப்பட்டவை என்பதையும் அறியாமல் தங்கள் பேச்சு வழக்கில் பலகாலும் பயன்படுத்தி வருகின்றனர். மக்கள் வாழ்க்கையில் அவ்வாறு ஊடுருவி வழங்கும் அரிய தொடர்களில் தாயுமானவர் அருளியவற்றைக் காண்போம்.

" அவன் அன்றி ஓரணுவும் அசையாது "

உலகில் நிகழும் எல்லாச்செயல்களும் இறைவன் ஆணையினாலேயே நிகழ்கின்றன என்பதை உணர்த்தும் இத்தொடர், தாயுமானவ அடிகளால் ஆப்தவாக்கியமாக எடுத்தாளப் பெறுகிறது. அரிய உண்மைகளை மக்களுக்குத் தெரிவிக்கும் ஆன்றோர் அறிவுரைகள் ஆப்தவாக்கியங்கள் எனப்படும். ஆப்தர், நமக்கு நன்மையையே விரும்புபவர்.

தாயுமானவர் கூறும் ஆப்தர் - திருநாவுக்கரசு சுவாமிகளே ஆவார். உலகில் நிகழும் செயல்கள் அனைத்தும் கடவுளின் ஆணையினாலேயே நிகழ்கின்றன என்பதையும், அவன் ஆட்டு வித்தலினாலேயே நாம் ஆடுகின்றோம் என்பதையும் திருநாவுக்கரசுசுவாமிகள் "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே" என்று தொடங்கும் திருத்தாண்டகத் திருப்பாடல் ஒன்றால் தெரிவித்தருளுகின்றார். தாயுமானவர், திருநாவுக்கரசர் கூறியருளிய இத்தொடரின் கருத்துக்குத் தனி வடிவம் கொடுத்து 'அவனன்றி ஓரணுவும் அசையாது எனும் பெரிய ஆப்தர் மொழி, என்று கூறியருளுகிறார். திருநாவுக்கரசர் கூறியருளிய கருத்தைத் தாயுமானவர் கூறியருளிய இத்தொடரால் உலககில் வழங்கப் படுவதைக் காணலாம்.

ஆசைக்கோர் அளவில்லை :

உலக வழக்கில் பேராசை உடையவர்களுக்குக் கூறும் இடித் துரையாகிய இத்தொடரும் தாயுமானவரால் கூறப்படுவதாகும். எல்லா உலகங்களையும் ஒருசேர அரசாளும் உரிமை பெற்ற மன்னரும் ஆசைக்கு அடிமையாகிக் கடல்மீதும் தன் ஆணை செலுத்தவிரும்புகின்றனர். அளகேசனாகிய குபேரனுக்கு நிகரான செல்வம் படைத்தவர்களும் மேலும் பொருள்பெற விரும்பி இரச வாதம் செய்ய விரும்புகின்றனர். உலகில் நெடுங்காலம் வாழ்ந்து இன்புற்றவர்களும் மேலும் உலகில் பல நாட்கள் வாழ்வதற்குக் காயகற்பம் தேடி மனம் புண்ணாகின்றனர். உள்ளதே போதும் என்ற மன நிறைவோடு நான் என்ற தன் முனைப்பின்றி, ஒன்றைவிட்டு ஒன்று பற்றாமல், ஆசை என்ற கடலில் வீழாமல், மனோதீதமாகிய மௌன நிலையை அடியேனுக்கு அருள்வாயாக என்ற கருத்துடைய தாயுமானவரின் திருப்பாடலும் அதில்வரும் 'ஆசைக்கோர் அளவில்லை' என்ற தொடரும் தமிழுலகம் நன்கு அறிந்ததாகும்.

சேரவாரும் செகத்தீரே :

யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற கருணை நோக்குடையவர் தாயுமானவர். சிவானுபவத்தை நுகர்ந்த அவர் அவ்வின்பத்தின் சிறப்பினை அறிந்து அனைவரும் அதனை அனுபவித்துப் பயன்பெற வேண்டும் என்ற அருள்நோக்குடன் உலகமக்கள் அனைவரையும் அறைகூவி அழைக்கின்றார்.

ஒரு பொருள் கிடைத்தால் அதனைத் தனியே உண்ணாமல் தன்னினத்தை அழைத்துக் கூட்டிக்கொண்டு உண்ணும் காகம் போலத் தான் பெற்ற இன்பத்தைப் பலரோடு கூடி நுகரும் பெரு நோக்குடன் அனைவரையும் அழைக்கின்றார் தாயுமானவர். 'சிவானுபவம் என்னும் பேரின்பவெள்ளம் பொங்கித் ததும்பிப்

பூரணமாய் ஏக உருவாய்க் கிடக்கிறது ; இவ்வுடல் அழியு முன்னமே அவ்வின்பத்தை அடைதற்குச்சேரவாரும்செகத்தீரே' என்று உலக மக்கள் அனைவரையும் அழைக்கிறார் அவர்.

காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர் அகண்டா காரசிவ
போகமெனும்பே ரின்பவெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏக உருவாய்க் கிடக்குதையோ இன்புற் றிட நாம் இனிஎடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேர வாரும் செகத்தீரே.

என்பது அப்பாடலாகும்.

கல்லாதபேர்களே நல்லவர்கள் :

படித்தவர்கள் தவறு செய்வதைக் கண்டால் உலகில் உள்ளோர் 'கல்லாதபேர்களே நல்லவர்கள்' என்று கூறக்கேட்கிறோம். இத்தொடரும் தாயுமானார் கூறியதேயாகும். கற்றதனாலாய பயன் வாலறிவன் நற்றாள் தொழுதலே என்பதை உணராது வீண் வாதங்கள் செய்வதற்கே கல்வியைப் பயன்படுத்துவோரைத் தாயுமானவர் கண்டித்துரைக்கின்றார்.

கற்றவர்கள் தாங்கள் கற்ற கல்வியறிவை மற்றவர்களோடு வாதம் செய்வதற்கே பயன்படுத்திவருதலைக்கண்டு தாயுமானவர் மனம்வருந்தி அவர்கள் செய்யும் குற்றங்களைத் தம்மீதே வைத்து அவர்களைக் கண்டிக்கிறார்.

"ஞானம் முக்கியம் என்றால் கன்மமே முக்கியம் என்றும், கன்மம்முக்கியம் என்றால் என்வாதத்திறமையால் ஞானம்முக்கியம் என்றும் கூறுவேன் ; வடமொழியில் வல்லவர் வந்தால் அவரிடம் திராவிட மொழியில் உள்ளதாக வாதிடுவேன் ; திராவிடமொழி வல்லார் வந்தால் அவரிடம் வடமொழியில் சில வசனங்கள் பேசி மருட்டுவேன் ; இவ்வாறு வாதத்திறமைகளால் நான் பெறும் வெற்றிகள் எனக்கு வீடுபேற்றினைத் தருமா" என்று கேட்பதன் மூலம் தாயுமானவர் கல்வியின் பயன் கடவுளை அடைதலே என்பதைத் தெரிவிக்கிறார். இக்கருத்தை நமது ஆதிபரமாசாரியராகிய ஸ்ரீ குருஞானசம்பந்தரும்,

"கற்கஇடர்ப் பட்டுமிகக் கற்றவெல்லாம் கற்றவர்பால்
தற்கமிட்டு நாய்போலச் சள்ளெனவோ — நற்கருணை
வெள்ளம் அடங்கும் விரிசடையார்க்கு ஆளாகி
உள்ளம் அடங்கவல்லவோ"

என்ற பாடலால் அருளிச்செய்துள்ளதை ஒப்பிட்டு உணரலாம்.

"எண்ணரிய பிறவிதனில் மானுடப் பிறவிதான்...அரிது"

பல பிறவிகளிற் செய்த புண்ணியப் பயனாலேயே ஒரு உயிருக்கு மானுடப்பிறவி வாய்க்கிறது. உயிர்கள் முட்டையில்

தோன்றுவன என்றும், வேர்வையில்தோன்றுவன என்றும், வித்து வேர் கிழங்கு முதலியவற்றை மேற்பிளந்து தோன்றுவன என்றும், கருப்பையில் தோன்றுவன என்றும் நால்வகைப்படும். இந் நால்வகைப் பிறப்பினையடையும் உயிர்கள் எண்பத்து நான்கு நூறாயிரம் யோனிபேதங்களை உடையன என்று கூறுவர். இப் பிறவிப் பெருங்கடலில் இளைக்கும் உயிர்கள் மானுடப்பிறவியை அடைதல் அருமையானது. இதனைச் சிவஞான சித்தியார்,

" அண்டசம் சுவேதசங்கள் உற்பிச்சம் சராயுசத்தோடு
எண்தரு நாலெண்பத்து நான்குநூ றாயிரத்தாய்
உண்டு பல்யோனிஎல்லாம் ஒழித்துமா னுடத்துதித்தல்
கண்டிடில் கடலைக் கையால் நீந்தினன் காரியங்காண் "

என்று கூறுகிறது.

" அரிது அரிது மானுடராதல் அரிது " என்றார் ஔவைப் பிராட்டியார். அரிய இப்பிறவி வாய்த்துள்ளபோதே அடைய வேண்டிய முடிவான பயனாகிய இறைவன் திருவருட்பேற்றையும் பெறவேண்டும் என்று கூறுகிறார் தாயுமானவர். " இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ ? ஏது வருமோ ? " என்று எச்சரித்து மனிதப் பிறவியின் பயனைப் பெறுமாறு அனைவருக்கும் தாயுமானவர் கூறிய அறிவுரைப் பாடல் தமிழ் மக்களிடையே பரவலாக வழங்கி வருவதாகும்.

இன்றைக்கிருப்பாரை :

நிலையாமை மூவகைப்படும். அவையாவன இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை ஆகியனவாம். உலக வாழ்க்கையில் இளமையும் செல்வமும் யாக்கையும் உள்ள போதே அவற்றால் எய்தும் பயனை நாம் அடைந்துவிடவேண்டும் என்று எச்சரித்தற்பொருட்டே இந்நிலையாமைகளைப் பெரியோர் கூறியுள்ளனர். " இன்றைக்கிருப்பாரை நாளைக்கிருப்பர் என்று எண்ணவோ திடமில்லையே " என்று யாக்கை நிலையாமையைத் தெரிவிக்கும் தாயுமானவர் பாடலைத் தமிழகம் நன்கு அறியும். உடலுள்ளபோதே இறைவனருளைப்பெற முயற்சிக்கவேண்டும் என்பதே இத்தொடரின் உட்கருத்தாகும்.

இவ்வாறு தாயுமானவர் திருப்பாடல்களில் இடம்பெற்றுள்ள பல தொடர்கள் பேச்சுவழக்கில் பயிலப்பெற்றுப் பலராலும் பயன்படுத்தப்பட்டுவருகின்றன. அன்பர்கள் அவற்றின் விழுமிய பொருளை உணர்ந்தும், அதனை அருளிய தாயுமானாரைப் போற்றியும் பயனுறுவார்களாக.

தாயுமானவர் புகழ் தரணியில் பரவுக, தரணி மக்கள் தயை அறம் போற்றுக.

உ

குருபாதம்

பொங்கல் வாழ்த்து

புலவர். திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ.,

மங்கலங்கள் பொங்கட்டும்! மனமா செல்லாம்
மறைந்தோடிப் போகட்டும்! மாதர் நெற்றிக்
குங்குமங்கள் வாழட்டும்! குமரிப் பெண்கள்
கொழுநன்தோள் சேரட்டும்! பெருமை எல்லாம்
சங்கமங்கள் ஆகட்டும்! சமுதா யத்தில்
சான்றாண்மை மலரட்டும்! சிவனார் நாமம்
எங்கெங்கும் பரவட்டும்! பொங்கல் நன்னாள்
இன்பத்தேன் பாய்ச்சிநமக் கிதஞ்சேர்க் கட்டும்!

அன்னை அருள்மாலை

திருமுறை இன்னிசைவாணர்,
வேலூர், திரு. க. சொக்கலிங்க ஓதுவார்.

அன்னியூ ரகலாத பெரியநா யகிஅன்பர்
அணுகுதிரு வேள்விக்குடி
அரசாளும் பரிமள சுகந்தநா யகியம்மை
அழகேறு மெதிர்கொள்பாடி
மன்னியுறை கின்றமலர்க் குழல்மா தம்மைதிரு
மணஞ்சேரி வாழணங்காம்
யாழின்மென் மொழியம்மை நாளும் குறுக்கையில்
மருவிடும் ஞானம்பிகை
சென்னியி லுறுகருப் பறியலூர் கோல்வளை
திருக்குரக் குக்காவினில்
சேருமழ கார்குமரி குந்தள நாயகி
திருவா ளொளிப்புத்தூர்
பன்னாளும் வாழும்வண் டார்குழலி யம்மையே
பண்ணிலுறு பெண்ணமுதமே
பஞ்சின்மெல் லடியிணையைத் தஞ்சம் அடைந்தென்றும்
பணிவேற் கருள் அன்னையே. (3)

காரைக்கால் அம்மையாரும் புரந்தர தாசரும் – ஓர் ஒப்பாய்வுக் குறிப்பு

டாக்டர். ந. சஞ்சீவி - பேராசிரியை. கிருஷ்ணா சஞ்சீவி

இருபதாம் நூற்றாண்டுத் தமிழின் இமாலயச் சிறப்பாய் இலங்குவது 'கலைக்களஞ்சியம்'. இதில் காரைக்காலம்மையார் பற்றிய குறிப்பு வருமாறு :-

அறுபத்து மூன்று சிவனடியார்களில் ஒருவர். இவர் தமிழ் நாட்டில் காரைக்காலில் வணிகர் மரபில் தோன்றிய தனதத்தர் புதல்வியார்; பரமதத்தர் மனைவியார்; புனிதவதி என்னும் பெயரினர். இவர் பரமதத்தருடன் இல்லறம் நடத்தும்போது ஒருநாள் பரமதத்தர் இரண்டு மாம்பழங்கள் கொண்டுவந்து கொடுத்தார். அன்று சமையல் முடியுமுன் வந்த ஒரு சிவனடியார் பசியைத் தணிக்கக் கறியமுதுக்குப் பதிலாக அம்மாம்பழங்களில் ஒன்றைப் புனிதவதியார் அரிந்து வைத்து உணவு படைத்தார். பிறகு வந்த கணவருக்கு மற்றொன்றைப் படைத்தார். கணவர் அதன் இனிமையில் ஈடுபட்டு, இரண்டாவது பழத்தையும் கொண்டுவரக் கட்டளையிட்டார். கணவர் கட்டளையின்றிச் சிவனடியார்க்கு மாங்கனி படைத்தது தவறென்றெண்ணிய புனிதவதியார் சிவபெருமானை வேண்டி, மற்றொரு மாங்கனி பெற்று வந்து கணவருக்குப் படைத்தார். பிறகு, இதன் உண்மையை உணர்ந்த பரமதத்தர் இவரைத் தெய்வமெனப் பாவித்து, உடன் வாழ அஞ்சி, அவரிடம் சொல்லாமல் பாண்டி நாட்டிற்குச்சென்று, மற்றொரு பெண்ணை மணந்து வாழ்ந்தார். கணவர் கருத்தை உணர்ந்த புனிதவதியார் கணவருக்காகச் சுமந்த வனப்புமிருந்த ஊனுடலில் உள்ள ஊனை உதறிவிட்டு வானமும் நிலமும் போற்றுமாறு எலும்புடம்புடையராய்க் கைலாயம் சென்றார். அங்குச் சிவபெருமான் அருளியபடியே தமிழ்நாட்டிலே திருவாலங்காட்டில் சிவபெருமானுடைய திருக்கூத்தைக் கண்டு மகிழ்ந்தவண்ணம் அப்பெருமான் திருவடி நிழலில் என்றும் நீங்கா அன்புடன் இன்புற்றிருந்தார். சிவபெருமான் இவரை 'அம்மையே' என்றழைத்ததனால் காரைக்கால் அம்மையார் என்ற திருப்பெயர் பெற்றார். இவர் அருளிச்செய்த

நூல்கள் அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, மூத்த திருப்பதிகம் என்பவை. இனிய பொருளும் பேரன்புச் சுவையும் கொண்ட அவை பதினோராம் திருமுறையில் சேர்க்கப் பெற்றுள்ளன.

இதே கலைக்களஞ்சியத்தில் புரந்தரதாசர் பற்றிய குறிப்பு வருமாறு :

புரந்தரதாசர் (1484 - 1554) இவர் பல்லாரி மாவட்டத்தில் உறம்பி நகரத்திற்கு அருகிலுள்ள 'புரந்தரகட' என்னும் ஊரில், பிராமண குலத்தில் பிறந்தார். இவருடைய தந்தையார் வரதப்ப நாயக் என்னும் கோபிசுவரர்; தாயார் கமலாம்பாள். கன்னடத்திலும், சமஸ்கிருதத்திலும், சங்கீதத்திலும் இவர் சிறந்த புலவரானார். பதினாறுவது வயதில் இவர் சரஸ்வதிபாய் என்னும் மங்கையை மணஞ் செய்து கொண்டார். இருபதாவது வயதில் பெற்றோர்களை இழந்தார். பின்னர் தகப்பனார் நடத்திவந்த இரத்தின வணிகத்தைத் தாமே நடத்தி வந்தார்.

இவர் தம் திறமையால் செல்வத்தைப் பதின்மடங்கு பெருக்கிக் கொண்டு நவகோடி நாராயணன் என்ற பெயருடன் விளங்கி வந்தார். செல்வம் மிகுந்தோறும் இவருக்கு உலோபமும் அதிகமாயிற்று. இதைக் குறித்து இவர் மனைவியார் பன்முறை வருத்தப்பட்டதுண்டு.

ஒருநாள் ஓர் அந்தணர் தம் புதல்வரின் உபநயனத்திற்காகத் தாசரவர்களை வந்து யாசித்தார். இவர் நாளைக்காகட்டும் என்றார். மறுநாள் அந்தணர் வந்து கேட்டும் இதே பதிலைக் கொடுத்தார். அந்தணரும் பொறுமையை இழக்காமல் ஒவ்வொரு நாளும் வந்து கேட்டும், காலங்கடத்தி வந்ததால் அவருக்கு வெறுப்புண்டாகித் தாசருடைய மனைவியாரிடம் போய்க் கேட்க, அவர் சற்றேனும் யோசியாமல் தம் விலையுயர்ந்த வைர மூக்குத்தியைக் கழற்றிக் கொடுத்து, 'இதைத்தாங்கள் விற்று உபநயனத்தை நடத்திக் கொள்ளுங்கள்' என்று சொல்லி அனுப்பினார். அவர் புரந்தரதாசரிடம் சென்று அம்மூக்குத்தியைவிற்றுப் பணம் பெற்றுச் சென்றார். தாசருக்கு அவ்வாபரணத்தைப் பார்த்ததும் ஐயம் ஏற்பட்டது. உடனே மனைவியின் மூக்குத்தியைக் கொணரும் படித் தம் ஆளை அனுப்பினார். அந்த ஆள் வந்து செய்தியைத் தெரிவித்ததும் சரஸ்வதிபாய்க்குத் திகைப்பும் பயமும் உண்டாயின. ஒன்றும் தோன்றாமல் கடவுளைத் தியானம் செய்தார். இவர்களுக்குக் குலதெய்வமாகிய பண்டரிநாதர் கிருபை கூர்ந்து, அந்த மூக்குத்தியைப் போலவே ஒன்றைக் கையில் வரச்செய்தார். தேவியாருக்கு உடனே வியப்பும்

அளவற்ற உவகையும் உண்டாயின. அம்மூக்குத்தியை விந்த ஆளிடம் கொடுத்தனுப்பினர்.

தாசர்மனைவியிடமிருந்துவந்தமூக்குத்தியையும், அந்தணரிடமிருந்து வாங்கிய மூக்குத்தியையும் ஒப்பிட்டு, இரண்டும் ஒரே மாதிரியிருக்கவே, வியப்புற்று மனைவியிடம்ஓடிவந்து, நடந்ததை ஒளியாமல் கூறும்படிக் கேட்டார். அவரும் பயந்து நடந்ததை முழுவதும் கூறினர். அப்போது தாசருக்கு மெய்யறிவு ஏற்பட்டது. உடனே தம் பொருள்கள் யாவற்றையும் தானம் செய்துவிட்டுப் பின்னர் தலயாத்திரைக்குப் புறப்பட்டார். பல தலங்கட்குச் சென்று வழிபாடு செய்து கடைசியாகப் பண்டரி புரத்திற்கு வந்து சேர்ந்தார்.

தாய்மொழியில் கீர்த்தனைகளைச் செய்த ஆதிவாக்கேயகாரர்களில் இவர் ஒருவர். இவருக்குப் பின்வந்த வாக்கேயகாரர்களில் பலர் இவருடைய நடையை அனுசரித்து உருப்படிகளை இயற்றியுள்ளார்கள்.

தாசரவர்கள் கடைசிக்காலத்தில் சந்நியாச ஆசிரமத்தைப் பெற்றார்.

2, ஜனவரி, 1564 வைகுந்த பதவி அடைந்தார்.

மேற்கண்ட இரு குறிப்புகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மாங்கனி - மூக்குத்தி அற்புதம், ஒரு பாணி (Pattern) என்பது விளங்கும். காரைக்காலம்மையார் காலம் கி பி 400 - 600 என்பர் டாக்டர் மா. இராசமாணிக்கனார்.

கருநாடகம் ஓர் ஆண் ''காரைக்காலம்மையாரை'க் காண்பதற்குச் சற்றேறப்ப ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழகம் ஒரு பெண் புரந்தரதாசரைக் கண்ட பெருமையே பெருமை!

பார்வையாளர் குறிப்பு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானம், திருவையாறு.

தூய்மையாக இருக்கும் ஆலயத்தில் வழிபடுவது வழிபடுவோர்க்கு மிகுந்த இன்பத்தைக்கொடுக்கும். இவ்வாலயத்தில் இன்று வழிபாடுசெய்ததில் எனக்கு தனி அமைதி கிடைக்கிறது. இது இவ்வாலயத்தில் துதிப்போர் எல்லோருக்கும் கிட்டவேண்டும் என்பது என் அவா.

(S-d) N. Palaniappau,
Disturd Judge, Thanjavur.

9—12—77.

"சுண்டைக்காய்"

திரு. மு. விட்டல் எம். எஸ்ஸி., (வேளாண்மை)

சராசரி மனிதன் அன்ருடம் தன் உணவில் 280 கிராம் காய்கறிகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று ஊட்டச் சத்து வல்லுனர்கள் வலியுறுத்துகின்றனர். ஆனால் தமிழ்நாட்டு மக்கள் குறைந்த அளவு காய்கறிகளையே தங்கள் உணவில் சேர்த்துக் கொள்ளுகின்றனர். நல்ல சத்துள்ள காய்கறிகளை மறந்து வாய்க்கு உருசியான காய்கறிகளையே பயன் படுத்து கின்றனர்.

குறிப்பாக நம் முன்னேர்கள் சுண்டைக்காயைக் காயாகச் சமைத்து உண்ணுவதோடு, எல்லாக் காலத்திலும் கிடைக்கும் வண்ணம் வற்றலாக்கிப் பயன்படுத்திவந்தனர்.

பலபேர் சுண்டைக்காயின் சிறு கசப்பை மனத்தில்கொண்டு பயன்படுத்துவதில்லை. ஆனால் சுண்டைக்காயில் உள்ள சத்துக் களின் அளவை இதர காய்கறிகளுடன் ஒப்புநோக்கின் அதன் சிறப்பை உணரலாம்.

ஒரு அவுன்ஸ் (28·4 கிராம்) உணவுப் பொருளில் அடங்கி யுள்ள சத்துக்கள் :

பெயர்	சர்க்கரை	புரதம்	கொழுப்பு	சுண்ணம்பு	பாஸ்பரஸ்	இரும்பு சத்து	ஏ. கெரோட்டின்	உயிர் சத்து பி.	சி.
	கிராம்	கி.	கி.	மி. கி.	மி. கி.	மி. கி.	கி	மி.கி.	
வெண்டை	2·2	0·6	0·1	25	23	0·4	16	18	4
கத்தரி	1·8	0·4	0·1	60	17	0·4	1	13	6
வாழைக்காய்	4·2	0·4	0·1	3	8	0·2	14	13	7
சுண்டக்காய் (வத்தல்)	15·6	2·4	0·5	100	50	6·3	213	—	—
தக்காளிக் காய்	1·3	0·5	0·1	6	11	0·7	91	20	9

ஒரு அவுன்ஸ் பொருளில் குறிப்பாக சுண்டைக்காயில் இதர காய்களைவிட ஆறு மடங்கு புரதமும், ஐந்து மடங்கு கொழுப்பும் அதிகமாக உள்ளன. சுண்ணும்புச்சத்து இதர நான்கு காய்களை ஒப்பு நோக்கின் மிக அதிகமாக உள்ளது. அதே போல், பாஸ்பரஸ், இரும்பு சத்து, உயிர்சத்து 'ஏ' மிக அதிகமாகவே உள்ளன.

இத்தகைய நல்ல சத்துக்களை அதிகமாகப் பெற்றுள்ள சுண்டைக்காயை நம் உணவுப் பழக்க வழக்கத்தில் யாவரும் சேர்த்துக் கொள்ளுவது மிகவும் அவசியமன்றோ!

பக்குவப் படுத்தலும், மருந்துத் தன்மையும் :

பொதுவாக சுண்டைக்காயில் இருவகை உண்டு. காட்டில் தானுகவே வளருவதை மலைச் சுண்டை எனவும் வீட்டில் பின்புறம் வளர்ப்பதை பால் சுண்டை எனவும், வழங்குவர். மலையினின்று நன்கு முற்றிய சுண்டையைப் பறித்து உலர்த்தி விற்பர். இது கசக்கும். இதைப் பக்குவப் படுத்த வேண்டும். குறிப்பாக மோரில் அளவான உப்பிட்டு அதில் வற்றலை ஊறவைத்து உலர்த்தி எடுத்தல் வேண்டும். இவ்வாறு நான்கைந்து முறை மோரில் ஊறவைத்து உலர்த்தி எடுத்தல் வேண்டும். எத்துணை முறை மோரில் ஊறவைத்து உலர்த்துகின்ருேமோ அவ்வளவு அதன் கைப்புத் தன்மை குறைகிறது.

இதை எண்ணெயில் இட்டு வறுத்து உணவுடன் சாப்பிடலாம். வறுத்துப் பொடிசெய்து சோற்றில் நெய்யுடன் கலந்து உண்ணலாம். சுண்டை அதிகமாக முற்ருத அளவில் பறித்து பருப்பிட்டு கடைந்து உணவுடன் உண்ண உருசியாக இருக்கும். வற்றலைக் குழம்பில் இட்டும் பயன்படுத்தலாம்.

இதை உண்டால் சுவாசக் குழாய் சம்பந்தப்பட்ட வாதனை நீங்கும். குறிப்பாக மார்ச்சளி, ஆஸ்துமா, காசநோய் ஆகிய வற்றுக்கு மிகவும் ஏற்றதாகும். எலும்பு வளர்ச்சிக்கு உதவுவதோடு பற்கள் வலுவுள்ளதாக ஆகின்றன. கண் பார்வைக்கும் ஏற்றதாகும். இதில் இரும்பு சத்துள்ளதால் இரத்தச் சோகையை தவிர்க்கும். இதனை உண்டால் பித்த அரிசி, மலக்கிருமி, ஆசனத் துவாரச் சிதக்கட்டு இவை நீங்கும். பசியை உண்டுபண்ணும். மார்ச்சளி, கிருமிரோகம், அசீரணபேதி, மூலவியாதி முதலியவைகட்கு உபயோகிக்கலாம்.

இதன் காயைச் சிற்றுமணக்கெண்ணெய் விட்டு வறுத்து, உப்பு, மிளகு, சீரகம், கறிவேப்பிலை, வெந்தயம் இவைகளையும்,

சிறிது வறுத்துக் கூட்டிப்பொடிசெய்து சோற்றுடன்கலந்து, மூலவியாதி, அக்னிமந்தம், அசீரணம், முதலியவை நீங்கக் கொடுப்பதுண்டு.

நெஞ்சில் கபப்போம் நிறை கிருமி நோயும்போம்
விஞ்சுவா தத்தின் விளைவும் போம் - வஞ்சியரே!
வாயைக் கசப்பிக்கும் மாமலையில் உள்ள சுண்டைக்
காயைச் சுவைப்பவர்க்குக் காண்.

— அகத்தியர் குறிப்பு.

சாகுபடி முறை :

சுண்டைக்காய் கடையில் வற்றலாகத்தான் கிடைக்கும். ஆயின் பச்சையாகச் சமைத்துண்ண வீட்டில் பின்புறம் ஓரிரு செடிகள் நட்டு வளர்க்கலாம். முறையும் எளிது. சுண்டை கொத்து கொத்தாக காய்க்கும். நன்கு முற்றிய காயைப் பறித்து காயை நறுக்கி அல்லது அழுத்தி கசக்கினால் நிறைய விதைகளைப் பெறலாம். வீட்டின் பின்புறம் மேற்படி விதைகளை ஒரு அடிக்கு ஒரு அடி பாத்தியில் தூவி நீர் விட்டு வந்தால் நாற்றுக்கள் முளைக்கும். மேற்படி விதையை எறும்பு எடுத்துச் செல்லாமல் காக்க பி. எச். சி. 10 % மருந்தை மேலே தூவுதல் நன்று.

விதை விதைத்த ஓரிரு மாதங்களில் ஒரு அடி உயரம் வரை வளர்ந்திருக்கும். வீட்டுத் தோட்டத்தில் மூலையில் ஒரு கன அடி குழி எடுத்து மக்கிய தொழு உரம் 10 கிலோ இட்டு நன்கு கிளறி குழியில் இரண்டு கன்றை நடவேண்டும். நட்டு நீரூற்றி பராமரித்தால் நட்ட நான்கு முதல் ஐந்தாம் மாதத்தில் பூக்கத் துவங்கி கொத்து கொத்தாய்க் காய்க்கும். நட்ட இரண்டாம் மாதம் நன்கு வளர்ந்துள்ள செடியை விட்டு மற்றதைப் பிடுங்கிவிடலாம். காய் நன்கு முற்றுமுன் பறித்து பயன்படுத்தலாம். வீட்டின் பின்புறம் தமிழகத்தே எவ்வாறு முருங்கை, கறிவேப்பிலை முதலிய வற்றை வளர்க்கின்றோமோ அதேபோல் சுண்டைச் செடியையும் வளர்க்கலாம்.

ஒரு முறை கன்று நட்டால் மூன்று நான்கு ஆண்டுகட்கு நன்கு பலன் தரும். செடி அதிகமாக ஐந்து ஆறடி உயரத்திற்கு மேல் வளராது. புதர் போன்று கிளைகள் விட்டு வளரும். வாரம் ஒருமுறையோ அன்றி 10 நாள்கட்கு ஒருமுறையோ சுண்டைக்காயைப் பறித்து கறியாக்கி உண்ணலாம். முற்றியதை பறித்து வற்றலாக்கிப் பயன்படுத்தலாம்.

சுண்டைக்காயையும் நம் காய்கறிகளில் முக்கியமாகக் கருதி உணவில்சேர்த்து உடலுக்குத் தேவையான சத்துக்களை எளிதில் பெறுவோமாக.

திருப்பைஞ்ஞீலித் தலச் சிறப்புகள்

தருமையாதீனத் தமிழ்ப் புலவர்
வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர்: எம்.ஏ.

சோழ்வள நாட்டில் காவிரியாற்றின் வடகரையில் அமைந்து விளங்கும் தேவாரப் பாடல்பெற்ற சிவதலங்கள் அறுபத்து மூன்றாகும். அவற்றுள் திருப்பைஞ்ஞீலி 61 – ஆவது தலமாக விளங்குவது.

திருச்சிராப்பள்ளிக்கு வடமேற்கே 20 கிலோ மீட்டர் தூரத்தில் இத்திருத்தலம் உள்ளது. திருச்சிராப்பள்ளியிலிருந்து மண்ணச்சநல்லூர் வழியாக இத்தலத்தை அடையலாம். திருப்பைஞ்ஞீலி, மண்ணச்சநல்லூரிலிருந்து 10 கி. மீட்டர் தூரத்திலும், பிக்ஷாண்டார்கோயில் இரயில் நிலையத்திலிருந்து மேற்கே 5 கி. மீட்டர் தூரத்திலும் இத்தலம் உள்ளது. பேருந்துகளில் சென்றால் கோயில்வாயிலில் இறங்கலாம். இத்தலத்திற்குச் செல்ல திருச்சிராப்பள்ளியிலிருந்து நகரப் பேருந்து உள்ளது.

கோயிலமைப்பு :

திருப்பைஞ்ஞீலி திருக்கோயில் ஊருக்கு நடுவே அமைந்து விளங்குகிறது. நான்கு பிராகாரங்கள் உள்ளன. கோயிலின் திருவாயிலில் மிகப்பெரிய இராஜகோபுரம் திருப்பணி தொடங்கப் பெற்று முடிவு பெறாத நிலையில் உள்ளது. வாயிலின் உயரம் 35 அடி. அகலம் 15 அடி. கோபுரத் திருப்பணிகளுக்கு நிலம் விடப்பெற்ற செய்தி கோபுர வாயிலில் உள்ள கல்வெட்டால் அறியப்படுகிறது. பெரிய கோயில். கிழக்குநோக்கிய சந்நிதி. கோயிலின் பரப்பளவு 1, 70 800 சதுர அடிகள். ஆலயத்துக்கு வெளியே விநாயகர் அமர்ந்துள்ள வசந்த மண்டபம், மூன்றும் பிராகாரத்தில் உள்ள தூற்றுக்கால் மண்டபம், நடுவில் உள்ள நாலுகால் மண்டபம் இரண்டாம் பிராகாரத்தில் உள்ள சுற்றுப் பிராகாரமண்டபம் ஆகிய மண்டபங்கள் கோயிலை அணிசெய்கின்றன.

புலிவரிக்கல் :

கோயிலின் சுற்றுப்பிராகார மதில்கள் மேல்தளங்கள் ஆகியன புலித்தோலில் உள்ள வரிகள் போன்ற வண்ணக் கருங்கல்லால் கட்டப்பெற்றுள்ளன. இவ்வூரின் எல்லைக்கு உட்பட்ட இடங்களில் மட்டுமே இக்கல் கிடைப்பதாகக் கூறப்படுகிறது. மூலத்தானம் கருவறைக்கோயில் கருங்கற் சுவர்களுக்கும் இக்கற்களுக்கும் வேறுபாடு காணப்படும். புலித்தோற் கல்லால் கோயில் அமைந்துள்ளமைக்குப் புராண வரலாறு ஒன்று கூறப்படுகிறது.

காடாக இருந்த காலத்தில் இத்தலத்தில் வியாக்ரசுரன் என்பான் புலிஉருவில் பைஞ்ஞீலி இறைவனை வழிபட்டுவந்தான். வேடன் ஒருவன் புலி என்று கருதி அதனைக் கொன்றனன். இறைவன் அப்புலியைநோக்கி 'வேண்டிய வரங்களைக்கேள்' என்றபோது புலி தன் வடிவம் இவ்வூர்க்கல்லில் இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டது. அவ்வாறேயாகுமாறு இறைவனும் அருள்புரிந்து புலிக்குச் சிவகதி அளித்தருளினான். புலிபெற்ற வரத்தால் இங்கு மதிலிலும் கோபுரத்திலும் மண்டபங்களிலும் புலிவரிகள் அமைந்து திகழ்கின்றன. இதுகாண்டற்கரிய காட்சியாகும். இத்தகைய புலிவரிக்கற்கள் இவ்வூர் எல்லையிலன்றி வேறு எங்கும் காண்டல் இயலாதென்றும் கூறுவர்.

வலம் வருவோம் :

முதலாம் கோபுரத்தைக் கடந்து உள்ளே நுழைந்ததும் வசந்த மண்டபத்தில் உள்ள வசந்த விநாயகரை வழிபடலாம். இரண்டாம் இராஜகோபுர வாயிலின் தென்புறம் சோறுடையீசுவரர் வீற்றிருக்கிறார். அப்பர் சுவாமிகளுக்கு அந்தணர் வடிவில் வந்து கட்டமுது கொடுத்து அழைத்து வந்த இறைவர் மறைந்த இடம் இது எனக் கூறுவர். வடபால் துறையூர் சமீந்தார்கள் கட்டிய விசுவநாதர்கோயில் உள்ளது. மூன்றும் பிராகாரமாகிய இப்பிராகாரத்தின் தென்புறம் எமன் கோயிலும் தீர்த்தமும் உள்ளன. கோயில் நிலமட்டத்துக்குக் கீழே பாறையில் அமைந்துள்ளது. பல்லவர் காலக் கோயிலமைப்பைக் கொண்டது. வடக்குப் பிராகாரத்தில் தீர்த்தம் உள்ளது. வலமாகவந்து கோபுர வாயிலைக் கடந்து உள்ளே சென்றால் மகாமண்டபத்தை அடையலாம். இம்மண்டபம் அம்பாள் கோயில்களை இணைத்துக் கோயிலுக்கு அழகும் கம்பீரமும்தரும் அழகிய பெரிய மண்டபமாகத் திகழ்கிறது.

இரண்டாம் பிராகாரத்தின் வெளிப்புறங்களில் இத்தலத்திற்குச் சிறப்புத்தரும் ஸ்ரீ வாழைகள் உள்ளன. மேற்குப் பிராகாரத்தில் விநாயகர் ஆறுமுகர் திருமால் கஜலக்ஷ்மி ஆகியோர் விளங்குகின்றனர். இத்தலத்தில் நவக்கிரகங்கள் இல்லை அதற்குப் பதிலாகச் சுவாமிசந்நிதியில் கொடிமரம் நந்தி பலி பீடங்களையொட்டி நவக்கிரகங்களைக் குறிக்கும் ஒன்பது குழிகள் உள்ளன. சுவாமிசந்நிதியின் வடபுறம் நடராஜரும், தென்புறம் உத்தர தெக்ஷிண கைலாச சோமாஸ்கந்தமூர்த்திகளும் உள்ளனர். சந்நிதிவாயிலைக்கடந்து உள்ளே சென்றால் முதற் பிராகாரத்தை அடையலாம். கர்ப்பக்கிருகக் கோஷ்டங்களில் நடன கணபதி தக்ஷிணாமூர்த்தி அர்த்தநாரீசர் பிரமன் முதலியோர் உள்ளனர். துர்க்காதேவி மேற்குப்புற மண்டபத்தில் எழுந்தருளி யுள்ளார். அர்த்த மண்டபத்தைக் கடந்து சுவாமி சந்நிதியை அடைந்தால் பைஞ்ஞீலி இறைவரின் அருட் கோலத்தைத் தரிசிக்கலாம். அர்த்தமண்டபத்தில் வசிட்ட முனிவருக்கு நடராஜர் திருநடனக் காட்சி அளித்த இடம் வழிபடற்குரியது. சம்பந்தர் அப்பர், சுந்தரர் ஆகியோர் பாடி வழிபட்ட பெருமைக்குரிய பைஞ்ஞீலி இறைவரை வழிபட்டு அருள்பெறலாம். அப்பர்சுவாமிகளுக்கு இறைவன் அந்தணர் வடிவில் எளியராய் எழுந்தருளிக் கட்டமுது அளித்து அழைத்துவந்து அருட்காட்சி காட்டியருளிய அற்புத நிகழ்ச்சியை நினைந்து ஸ்ரீவனநாதரை நாமும் வழிபடுவோம்.

விழுது சூலத்தன் வெண்மழு வாட்படை
கழுது துஞ்சிருள் காட்டகத் தாடலான்
பழுது ஒன்றின்றிப் பைஞ்ஞீலிப் பரமனைத்
தொழுது செல்பவர் தம்வினை தூளியே.

என்பது இத்தலத்து இறைவர்மீது அப்பர் அருளிய தேவாரப் பாடல்களில் ஒன்றாகும். வழிபட்டு வெளியேவந்து அம்பிகை சந்நிதியை அடைகிறோம். இத்தலத்தில் இரண்டு அம்பிகைகள் உள்ளனர். இறைவனது இடது பாகத்தில் விளங்கும் அம்பிகை சந்நிதி கிழக்கு நோக்கி உள்ளது. பழைய அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கி உள்ளது. அம்பிகை இருவரையும் வழிபட்டு வழிபாட்டை முடிப்போம்.

அப்பருக்குக் கட்டமுது அளித்தது :

இத்தலத்தின் சிறப்பினை விளக்கும் அற்புத வரலாறு அப்பரடிகளுக்கு இறைவன் கட்டமுதளித்த செயலாகும். திருநாவுக்கரசு சுவாமிகள் சிவபெருமான் எழுந்தருளி விளங்கும்

திருத்தலங்கள் பலவற்றையும் வணங்கிக் கொண்டு திருப்பாச்சிலாச்சிராமத்தை அடைந்து வழிபட்டார். அங்கிருந்து திருப்பைஞ்ஞீலியை வழிபடும் ஆர்வத்தோடு வழிநடந்தார் கடுங்கோடைக்காலம். பசியாலும், தாகத்தாலும் மிக வாடியும் சித்தம் அலையாது நடந்தார். பைஞ்ஞீலி இறைவன் சிவ வேதியராய் ஊர் எல்லையில் ஒரு சோலையையும், குளத்தையும் உண்டாக்கிக்கொண்டு பொதி சோற்றுடன் அடியவர் வருகைக்காகக் காத்திருந்தார், அப்பர் அருகில்வந்தவுடன் 'பசியால் இளைத்திருக்கின்றீர் போலும்; என்னிடம் பொதிசோறிருக்கிறது; உண்டு இக்குளத்தில் நீரருந்தி இளைப்பாறும்' என்று பொதி சோற்றைக்கொடுத்தார். அப்பரும் அதனை வாங்கி அமுதுசெய்து நீரருந்தி இளைப்பாறினர். வேதியர் அப்பரை நோக்கி, 'எங்குச் செல்கின்றீர்' என்ருர். அப்பர் 'திருப்பைஞ்ஞீலி செல்கின்றேன்' என்ருர். அந்தணர் 'நானும் அங்கேதான் போகின்றேன்' என்று கூறி அவருடன் சென்று கோயிலை அடைந்தவுடன் மறைந்தருளினர். பொதிசோறு அளித்தவர் இறைவனே என்பதை அறிந்த திருநாவுக்கரசர். பெருமானது திருக்கருணையை வியந்து போற்றித் திருக்கோயிலுக்குள் சென்று தரிசித்துப் பதிகம் பாடியருளினர். இறைவனும் அருட்காட்சி வழங்கியருளினர். அப்பருக்குக் கட்டமுதளித்த திருக்குளம் தெற்கே ஊர் எல்லையில்உள்ளது. ஆண்டுதோறும் சித்திரை அவிட்டத்தன்று இவ்விழா நடைபெறுகிறது.

தலத்தின் வேறு பெயர்கள் :

ஞீலி என்னும் வாழையைத் தலமரமாகக்கொண்டுள்ளதால் ஞீலிவனம், கதலிவனம், அரம்பைவனம் என்றும், விமலையாகிய பார்வதி தங்கி வழிபட்டதால் விமலாரண்யம் என்றும், வெள்ளிய கற்களைக் கொண்டுள்ளதால் தரளகிரி முத்துமலை, சுவேதகிரி, வெள்வரை என்றும் ஓங்காரம்போல் விளங்குவதால் ஓங்காரகிரி பிரணவகிரி என்றும், புலிவரிக் கோடுடைய கற்களால் கட்டப்பட்டுள்ளதால் வியாக்ரபுரி என்றும், கயிலைமலைச் சிகரங்களில் ஒன்ருக இத்தலக்கோயில் கருதப்படுவதால் தென் கயிலாயம் என்றும், வசிட்டருக்குச் சிதம்பர தரிசனம் காட்டியதால் மேலைச் சிதம்பரம் என்றும் இத்தலம் வழங்கப்படுகிறது.

மூர்த்திகள் :

இத்தலத்து இறைவர்க்கு 42 திருப்பெயர்கள் கூறப்படுகின்றன. அவற்றுள் அதிகவழக்காறுள்ள குறிப்பிடத்தக்க, பெயர்கள் கதலிவசந்தர், ஞீலிவனநாதர், நீலகண்டர், சக்கரத்தியாகர், ஆரண்யவிடங்கர் என்பனவாகும். சுந்தரர் ஆரண்யவிடங்கர் என்னும் பெயரைத் தம் தேவாரத்துள் குறித்துள்ளார்.

அம்பிகைக்கு வடமொழியில் விசாலாக்ஷி, தமிழில் நீள் நெடுங்கண்ணி என்னும் பெயர்கள் கூறப்படுகின்றன. விநாயகர் வசந்தமண்டப விநாயகர் என்றும், நடராஜர் இரத்தினசபாபதி என்றும் வழங்கப் பெறுகின்றனர். இங்குள்ள நடராஜர் சபைக்கு இரத்தினசபை என்று பெயர். வசிட்ட முனிவருக்கு நடனக் காட்சியளிக்கப்பெற்ற சிறப்பு இத்தலத்திற்குரியது. மகாமண்டபத்தில் நடராஜருக்குரிய ஒரு கல்பீடம் உள்ளது. விசேஷ நாட்களில் அப்பீடத்திற்கு அபிஷேக ஆராதனைகள் நிகழ்கின்றன. இத்தலத்தில் இரண்டு அம்மன் சந்நிதிகள் உள்ளன. பிரதான அம்பாள்கோயில், சுவாமியின் இடதுபாகத்தில் கிழக்குநோக்கி விளங்குகிறது.

பழமையான அம்பாள் திருவுருவம் பின்னமடைந்திருந்ததால் அதனை அகற்றிப் புதிய அம்பாளை அவ்விடத்தில் பிரதிஷ்டை செய்து மகாகும்பாபிஷேகம் செய்வித்தபோது, பழைய அம்பாள் மகாகும்பாபிஷேகம் செய்வித்த துறையூர் ஜமீன்தார் கனவில் தோன்றி, தனக்குக் கோயிலில் இடமளிக்கவேண்டுமென்று கேட்டதால் பழைய அம்பாளையும் தெற்குநோக்கித் தனிக் கோயிலில் பிரதிஷ்டை செய்திருப்பதாகக் கூறுகின்றனர். இரண்டு சந்நிதிகளுமே மிக்க விளக்கத்தோடு திகழ்கின்றன.

தீர்த்தங்கள் :

பார்வதி தேவியால் உண்டாக்கப்பட்டதாகத் தலபுராணம் கூறும் விமலாரண்ய நதி இன்று காணப்படவில்லை. இக்கோயிலைச் சேர்ந்த தீர்த்தங்கள் மணிகர்ணிகை, அப்பர்தீர்த்தம், தேவ தீர்த்தம், அக்னிதீர்த்தம், யமதீர்த்தம், கல்யாணதீர்த்தம், விசால புஷ்கரணி என்பனவாகும்.

தேவ தீர்த்தம் ஆலயத்துக்கு வடக்கே உள்ள பெருங் குளமாகும். வசந்த மண்டபத்துக்கு வெளியே உள்ளது அக்னி தீர்த்தம், இதில் குளிப்பவர் வெண்குட்ட நோய் நீங்கப்பெறுவர் எனக் கூறப்படுகிறது. அம்பாள் சந்நிதிக்கு எதிரில் உள்ளது விசாலதீர்த்தம்; கிணறு வடிவாயுள்ளது. இதுவே சுவாமிக்குத் திருமஞ்சனமாட்டுவதற்குப் பயன்படுகிறது. இத் தீர்த்தத்தில் குளித்தல் கூடாது. தலையில் தெளித்துக் கொள்ளலாம்; உட்கொள்ளலாம்.

தலமரம் ஸ்ரீவி :

ஸ்ரீவி எனப்படும் ஒருவகை வாழையே இக்கோயிலுக்குரிய தலமரமாகும். இவ்வூர் மக்கள் இதனைத் தெய்வமாகப் போற்று

கின்றனர். இவ்வாழை தனியினமாக உள்ளது. வேறிடங்களில் இது பயிராவதில்லை என்றும் வேறு வாழைகளைக் கொண்டு வந்து கோயிலில் பயிரிடுவதில்லை என்றும் கூறப்படுகிறது. இவ்வாழையின் கனியை சுவாமிக்கு அபிஷேகம் செய்து தண்ணீரில் விட்டுவிடுவார்கள். அக் கனிகளை யாரும் உண்பதில்லை. அம்பிகை இத்தலத்தில் தங்கித் தவம்செய்து இறைவனை வழிபட்டபோது அரம்பையர்கள் வாழையாக இருந்து சிவலிங்கத் திருவுருவிற்கு இலைகளால் நிழல் செய்தனர் எனத் தலபுராணம் கூறுகிறது.

புராண வரலாறுகள் :

இத்தலத்திற்கு மெய்ப்பாதபுராணிகரால் வடமொழியிலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பெற்ற புராணம் ஒன்றுண்டு. குடந்தையிலிருந்து அரசுபுரிந்த சந்திரவீர சோழனுக்கு அகத்தியர் கூறுவதாகப் பாடப்பெற்றது. அந்நூலில் கூறப்பட்டுள்ள புராண வரலாறுகளுள் சிலவற்றைக் காண்போம் :

அம்பிகை தவம் செய்தது :

அம்பிகை இத்தலத்தில் தன் பெயரால் தீர்த்தமொன்றுண்டாக்கித் தங்கித் தவம்செய்து இறைவனை வழிபட்டாள். அரம்பையர்கள் வாழைகளாய்ச் சிவலிங்கத்திற்கு நிழல்செய்தனர். அன்னையின் தவத்துக்கிரங்கிய பெருமான் அருட்காட்சியளித்து அழைத்துச்சென்று கயிலையில் மணம்செய்துகொண்டார்.

தென் கயிலாயம் :

இந்திரசபையில் ஆதிசேடனுக்கும் வாயுதேவனுக்கும் போர் ஏற்பட்டுப் போட்டியாய் மாறிற்று. கைலைமலையை ஆதிசேடன் இறுகச் சுற்றிக்கொள்வதென்றும் வாயுதேவன் அதனை அசைக்க வேண்டும் என்றும் ஒப்பந்தம். யார்வெற்றி பெறுகின்றாரோ அவரே பெரியவர் என்பது போட்டியின் முடிவு. ஆதிசேடன் பற்றிக்கொள்ள வாயுதேவன் அசைக்க இறைவன் திருவுளக் குறிப்பால் முடிவில் கயிலையிலிருந்து சில சிகரங்கள் பறந்து வந்து தென் திசையில் விழுந்தன. அவைகளே திருச்சிராப்பள்ளி, திருக்காளத்தி, திரிகோணமலை, சுவேதகிரி, ஈங்கோய்மலை, இரத்தினகிரி ஆகியனவாகும். திருப்பைஞ்ஞீலியினடியில் விளங்கும்மலை சுவேதகிரி ஆதலின் இத்தலம் தென்கயிலை எனப்பெற்றது.

யமனுக்கு அருள் செய்தது :

சிவபிரானருளால் மிருகண்டு முனிவரின் புதல்வராய்த் தோன்றியவர் மார்க்கண்டேயர். அவர் இளமைப் பருவத்தில் எல்லாக் கலைகளையும் நன்கு கற்றுச் சிறந்து சிவபக்தியில் தலை நின்றார். அவருக்குப் பதினறு ஆண்டுகளே வாழ்நாள் அருளி யிருந்தான் இறைவன். மார்க்கண்டர்க்கு வயது பதினைந்து நிறையும்போது மனங்கவன்றனர் பெற்ருேர். பெற்ருேர்வருந்து வதை அறிந்த மார்க்கண்டர் இறைவன் திருவடிகளே அடைக் கலம் என்றுகருதி, பல தலங்களுக்கும் சென்று இறைவனை வழி பட்டுத் திருக்கடவூரை வந்தடைந்தார். அமுதகடேசுவரரை வழிபட்டார். அவர்தம் வாழ்நாள் முடிவுற்றதை அறிந்த எமன் அவர் உயிரைக் கவரக் காலபாசத்தை அவர்மீது வீசினன். காலபாசம் சிவலிங்கத்தைப் பூசித்துக்கொண்டிருந்த மார்க்கண் டேயரைப் பிணித்தது. உடனே இறைவன் சிவலிங்கத்தி லிருந்து வெளிப்பட்டு எமனை அழித்து மார்க்கண்டேயர்க்கு என்றும் பதினறுண்டாயிருக்கும் சிரஞ்சீவித் தன்மையை அருளினன். எமன் அழிந்தான். யமபுரி அழிந்தது. உலகில் உயிர்கள் பெருகின. புண்ணியம் குறைந்தது; பாவம் பெரு கிற்று. திருப்பைஞ்ஞீலியில் மட்டும் அறம்வழுவாது அனைத்துச் செயல்களும் நடைபெற்றன. பிற ஆலயங்களில் உள்ள சிவகலை கள் யாவும் திருப்பைஞ்ஞீலியை அடைந்தன. தேவர்களனைவரும் திருப்பைஞ்ஞீலியை அடைந்து சிவபெருமானை நோக்கித் தவம் செய்தனர். இறைவன் அனைவர்க்கும் காட்சிகொடுத்து அருள் செய்தார். திருக்கோயிலின் தென்திசையில் உள்ள ஒரு பிலத் துவாரத்தின் வழியே எமனை அழைப்பித்து சிவபக்தர்களைக்கவர லாகாது என்று கூறி உபதேசங்கள் புரிந்து அழித்தல் தொழி லுக்குரிய அதிகாரத்தை மீண்டும் அருளியனுப்பினர். இத்தலத் தில் வாழ்வோர்க்கு மரண வேதனை இல்லை. எமனுக்கு அருள் புரிந்த இடம் மூன்றும் பிராகாரத்தில் தென்திசையில் பூமிக்கடி யில் உள்ளது.

கலியுகராமபாண்டியன் அருள் பெற்றது:

மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட கலியுகராம பாண்டியன் என்னும் மன்னன் முன்செய்த வினைகளின் பயனய் வெண்குட்ட நோய்க்கு ஆளானன். மருந்துகள் பலவற்றாலும் குணமாகாமையைக் கண்ட மன்னன் சிவபெருமானை வேண்டிச் சிவதல யாத்திரை மேற்கொண்டு திருநெல்வேலிக்கு வந்து வழி பட்டான். திருப்பைஞ்ஞீலிக்கு வருமாறு இறைவன் பணித்தான்.

அவ்வாணைப்படியே இத்தலத்தை அடைந்த பாண்டியன் வசிட்டர் முதலிய முனிவர்களை வணங்கி அவர்கள் அறிவுரைப்படியே எட்டு நாட்கள் எட்டுத்தீர்த்தங்களில் நீராடி அஷ்ட லிங்கங்களைப் பூசித்து நோய் நீங்கப் பெற்றான். திருப்பைஞ்ஞீலித் திருக்கோயில் கோபுரம் திருமதில் முதலியவற்றைக் கட்டுவித்துப் பல நாட்கள் இத்தலத்தில் தங்கி இறைவனை வழிபட்டுச் சிவகதி பெற்றான். பாண்டியர்செய்த திருப்பணிகளுக்கு அடையாளமாக கயல் இலச்சினைகள் இக்கோயிலில் பல இடங்களில் செதுக்கப் பெற்றுள்ளன.

செவிவழிக்கதை :

முற்காலத்தில் இத்தலம் காடாக இருந்தது என்றும், சுவாமி புதரில் மூடி மறைந்திருந்தார் என்றும், இத்தலத்தில் மேய்ந்த பசுக்கள் சிவலிங்கம் இருந்த இடத்தில் தம்மையறியாமல் பால்சொரிந்த காரணத்தினால் பால் குறைந்தது கண்டமக்கள், புதரை அகழ்ந்தபோது சிவலிங்கம் வெளிப்பட்டதென்றும் அவ்விறைவரே பைஞ்ஞீலிநாதர் என்றும் கூறப்படுகிறது.

கல்வெட்டுக்கள் :

இத்தலத்தில் இராசேந்திரசோழன், இராசாதிராசன், இராசராசதேவன், கோனேரின்மைகொண்டான் ஆகிய சோழ மன்னர் காலங்களில் செதுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் உள்ளன. இக்கல்வெட்டுக்களில் இத்தலம் இராசேந்திரசிங்கவள நாட்டைச் சேர்ந்தது என்றும், இராசாதிராச வள நாட்டு வடவழிநாட்டைச் சேர்ந்தது என்றும் கூறப் பட்டுள்ளது. இறைவன் பெயர் திருப்பைஞ்ஞீலி மகாதேவர் திருப்பைஞ்ஞீலி உடையார் என்றும் காணப்படுகிறது

கோனேரின்மைகொண்டான் இத்தலத்தில் எழுநிலைக் கோபுரத்தைக் கட்டத்தொடங்கினான் என்பதை அக்கோபுர வாயிலில் உள்ள கல்வெட்டால் அறியலாம்.

மெய்கண்ட நூல்கள்

⊲(ஆராய்ச்சி முன்னுரை)⊲

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

திரு. கு. சுந்தரமூர்த்தி எம். ஏ.,

(மலர் 37, இதழ் 1, பக்கம் 32 இன் தொடர்ச்சி)

தனிநிலை :

(i) சிவஞானபோதம் :

பன்னிரு நூற்பாக்களை உடையது. 40 வரிகளைக்கொண்டது. தொடக்கத்தில் பொல்லாப் பிள்ளையாருக்கு வணக்கம் கூறப் பெற்றுள்ளது. வாழ்த்து, வணக்கம், வருபொருள் உரைத்தல் ஆகிய மூன்றற்கும் பொருந்த இவ்வணக்கம் அமைந்திருப்பது போற்றற்குரியது. பின்வரும் நூற்பாக்களைப் போலவே இவ் வணக்கமும் சுருங்கிய சொல்லால் விரித்துப் பொருள் விளக்கும் பெற்றியது. அடுத்துள்ள அவையடக்கப் பாடலும் தனிச் சிறப் புடையது. தம்மையும் தம் தலைவனையும் உணர்ந்தவர்களுக்குரிய சிறப்பையும், அவ்வாறு உணராதவர்களுக்குரிய சிறப்பின்மையை யும் இப்பாடல் எடுத்துரைக்கின்றது. இறை தளை உயிர் ஆகிய மூன்றும் உள்பொருளே என்பதை முதல் மூன்று நூற்பாக்களும் நிறுவுகின்றன. ஆதலின் இவற்றைப் பிரமாண இயல் என்பர். அடுத்துள்ள மூன்று நூற்பாக்களும் இவற்றின் இலக்கணங்களை விரித்துரைப்பன. ஆதலின் அவற்றை இலக்கண இயல் என்பர். இம்முப் பொருளில் உயிர் இறையருள் வழி நின்று ஏனைய இரண்டையும் உணர்தற்குரியது. ஆதலின் அவ்வுயிர் தவத் தால் குருவருளைப் பெற்று உய்திபெற வேண்டுமென்பதை அடுத்துள்ள மூன்று நூற்பாக்களும் கூறுகின்றன. ஆதலின் அவற்றைச் சாதன இயல் என்பர். அச்சாதனத்தால் உயிர் பாச நீக்கமும் சிவப்பேறும் பெற்று அச்சிவப்பேற்றினின்றும் வழுவாது இருத்தற்குரிய அருண்மையும் பெற்று வாழும் என்பதை அடுத்துள்ள மூன்று நூற்பாக்களும் கூறுகின்றன. ஆதலின் அவற்றைப் பயனியல் என்பர். தாம் எடுத்துக்கொண்ட கருத்துக்களை ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் ஆராய்ந்து

உணர்த்துதற்கு முப்பத்தொன்பது அதிகரணங்களையும், எண்பத்தொரு வெண்பாக்களையும் ஆசிரியர் அருளியுள்ளார். நூற்பாக்களும் வெண்பாக்களும் சுவையுடையன. 'அமைச்சு அரசு ஏய்ப்ப' 'விளம்பிய உள்ளத்து மெய்வாய்கண் மூக்கு அளந்தறிந்து அறியா ஆங்கவை போல' 'உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவ', 'காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்' எனவரும் உவமைகள் மிக எளிமையும் இனிமையும் உடையன. இவை நூற்பாக்களில் உள்ளன. இவை போன்றே பண்ணையும் ஓசையும் போலப் பழமதுவும் எண்ணும் சுவையும் போல்,' அரக்கொடு சேர்த்தியணைத்த அக்கற்போல், பசித்துண்டு பின்னும் பசிப்பானையொக்கும் என்பன போன்ற உவமைகள் வெண்பாக்களிலும், ஊசல் கயிறற்றால் தாய் தரையேயாந்துணையான்' 'வேம்பு தின்ற புழுப்போல' என்பன போன்ற உவமைகள் அதிகரணங்களிலும் இருந்து அணி செய்கின்றன. தத்துவக் கூறுகளை இத்தகைய உவமைகளின் மூலம் விளக்கும் ஆசிரியரின் அருளுள்ளம் அறிதற்குரியது. 'ஐப்புலவேடர்', 'தண்ணிழலாம்பதி' எனவரும் உருவகங்கள் மிகவும் நுட்பம் வாய்ந்தன.

(ii) சிவஞான சித்தியார் - சுபக்கம் :

சிவஞான போதத்தின் விரிவுரையே இப்பகுதியாகும். விருத்தப்பாவால் ஆய 328 பாக்களையுடையது இப்பகுதி. இப்பகுதிக்கு முன்னர் இரு தலைப்புக்கள் உள்ளன. ஒன்று பாயிரம்; பிறிதொன்று அளவையியல் என்பது. பாயிரம் ஆறு பாடல்களையுடையது. 'என்னை இப்பவத்தில் சேரா வகை யெடுத்து' எனத் தொடங்கும் பாடல் இந்நூலாசிரியர் தம் குருமூர்த்தியாய மெய்கண்டாரிடத்துக்கொண்ட பரன்பின் ஆழத்தை உணர்த்துவதாகும். 'கண்ட நூல் ஓதிவீடு காதலிக்கும்' நம்மவர்க்கே இத்தகைய ஞான நூல்கள் தேவை என ஒரு பாடல் கூறுகின்றது. இதனால் 'ஞானசம்பந்தர், கண்ணப்பர் போன்ற அருளாளர்கள் எத்தகைய மெய்ந்நூல்களைக் கற்று விடுபேறு பெற்றார்கள்' என வினவுவார்க்கு விடையும் கிடைத்து விடுகின்றது. அடுத்துள்ள அளவையியல் பதினொன்கு பாடல்களை யுடையது. ஒரு பொருளை உண்டென்று தெளிவதற்குத் துணையாயினவற்றை அளவை என்பர். அவை காண்டல், கருதல், உரை முதலாகப் பலவகைப் படும். சைவ சித்தாந்தத்துள் கூறப்பெறும் முப்பொருள்களும் உண்டென உணர்தற்கும் தெளிதற்கும் இவை கருவியாய்இருத்தலின் ஆசிரியர் இவற்றைக் கூறுவாராயினர். அடுத்துள்ள பகுதியே சுபக்கம் என்பதாகும்.

'ஒருவழி நூல்' முதல் நூற்கருத்துக்களை எவ்வெவ்வாறுமுகந்து நின்று விளக்கம் தரவேண்டும்' என்பதற்கு இலக்கணமாக அமைந்தது இப்பகுதியாகும். சிவஞானபோத விளக்கவுரையாகவும், சுவை ததும்பும் ஓர் இலக்கியமாகவும் இப்பகுதி விளங்குகின்றது. பல பாடல்கள் படிப்போரை ஆழ நினையச் செய்து இறைவனிடத்து ஆற்றுப்படுத்தும் தகையன. இறைவன் உருமேனி தரித்துக் கொண்டு உய்விப்பதை விளக்கும் பகுதியும் அவையெல்லாம், 'நந்தம் கருமேனி கழிக்கவந்த கருணையின் வடிவுகாணே' எனக்கூறும்பகுதியும், 'அண்டசம் சுவேதசங்கள்' 'நரர்பயில் தேயந்தன்னில்' 'வாழ்வெனும் மையல் விட்டு' 'மானுடப் பிறவிதானும்', 'கருவினுள் அழிவதாயும்', 'அரிசனம் பூசி மாலை' 'பிணத்தினை ஒத்து வாழ்வோர்' என்றத்தொடக்கத்தனவாய முதற்குறிப்புடைய பாடல்கள் பலவும் இவ்வுண்மையை விளக்கும். 'வானிடத்தவரும் மண்மேல் வந்து அரன்தனை அர்ச்சிப்பர், ஊனெடுத்து உழலும் ஊமர் ஒன்றையும் உணரார் அந்தோ' என்பது போன்ற பகுதிகள் ஆசிரியரின் கழிவிரக்க மிதூர்வைக் காட்டுவனவாகும். உயிர் கருவிகளோடு கூடி ஐந்தவத்தைப் படுமாற்றிற்கு 'அமைச்சு அரசு ஏய்ப்ப' என முதலில் கூறியிருக்கும் உவமையை இவர், 'படைகொடு பவனி போதும்' எனத் தொடங்கும் திருப்பாடலில் விளக்கியிருக்கும் திறன் பன்முறையும் எண்ணி மகிழ்தற்குரியது. இதைப்போன்றே 'ஐம்புலவேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனை' என முதல் நூற்கண் உள்ள எட்டாம் நூற்பாவை, இவர் 'மன்னவன் தன் மகன் 'எனத் தொடங்கும் திருப்பாடலால் விளக்கியிருக்கும் திறமும் எண்ணி மகிழ்தற்குரிய தொன்றாகும்.

(iii) சிவப்பிரகாசம் :

இந்நூல் 100 பாடல்களையுடையது. பொது இயல்பு, உண்மை இயல்பு என இரு பிரிவுகளை உடையது. நூலின் தொடக்கத்தே பாயிரம் என்ற பகுதியுள்ளது. இதன்கண் காப்பும் கூத்தப்பெருமான், உமையம்மை, விநாயகர், முருகர் ஆகியோருக்கு வணக்கமும் கூறப்பெற்றுள்ளன. அடுத்துத் தமக்கு முன்னிருந்த ஸ்ரீ கண்டர், நந்தியம்பெருமான், சனற்குமாரர், சத்திய ஞான தரிசினிகள், பரஞ்சோதி முனிவர், மெய்கண்டார், அருணந்தி சிவம், மறைஞானசம்பந்தர் ஆகிய அகப்புறச் சந்தான குரு முதல்வர்களுக்கும், அடுத்துத் தமக்கு நேர்முக ஆசிரியரான மறைஞானசம்பந்தருக்கும் வணக்கம் கூறுகின்றார் ஆசிரியர். இவ்வாறு வணக்கம் கூறப்பெற்றுள்ள முறை இந்நூற்கே அமைந்த சிறப்பாகும். நுவலும் பொருள்

கூறுங்கால் சைவ சித்தாந்தச் சிறப்பு விளக்கப் பெற்றுள்ளது. இதனையடுத்துத் தீட்சையின் வகைகளும் அதன் பயன்களும் கூறப்பெற்றுள்ளன. நூல் வழியும், நூற் பெயரும், கூறும் முறையும், அவையடக்கம் கூறும் முறையும் இந்நூற்கு அமைந்த தனிச்சிறப்பினை விளக்குவதாகும். நூல் வழியில் சிவஞான போதம், சிவஞானசித்தியார் ஆகிய இரு நூற் கருத்துக்களையும் அடிப்படையாகக் கொண்டு அவற்றுடன் ஆகமங்களின் கருத்துக்களையும் ஏற்று இந்நூலைச் செய்வதாக ஆசிரியர் கூறியுள்ளார். அவையடக்கத்துள் எத்தகைய பொருள் உண்மையும் தொன்மை எனக் கருதி நன்றென்றலும், இன்று தோன்றியது என்பதால் தீதென்றலும் தவறு என்னும் உண்மை மிக அழகாகக் கூறப்பெற்றுள்ளது. நூலுண்மைதேறுவாரைத் தலை, இடை, கடையெனப் பிரித்துத் தலையாயார் சொற்குற்றம் முதலியன உளவாயினும் பொருள் நயங்கருதி ஏற்பர் என்றும், இடையார் பழைமை பழகு, புதுமை நூல்களில் காணின் அதனை ஏற்று மகிழ்வர் என்றும், கடையாயார் தமக்கென அறிவிலராதலின் பிறர்புகழின் புகழ்ந்தும் பிறர் இகழின் இகழ்ந்தும் வருவரென்றும் கூறியிருப்பது எண்ணி மகிழ்தற்குரிய தொன்றாகும். பொது இயல்பில் இம் முப்பொருள் உண்மைபற்றிய விளக்கம் உள்ளது. உண்மை இயல்பு கூறத் தொடங்குங்கால் இன்ன இன்ன பொருள்களைக் கூறுவன் என நுதலிப் புகுகின்றார் ஆசிரியர். உண்மையியல்பில் உயிரியல்பு, அது ஐந்தவித்தைப் படுமாறு உயிர்தானாக யாதொன்றையும் அறியாமை, அத்தகைய உயிர்க்கு இறைவன் உணர்த்தும் முறைமை, சிவஞானத்தின் உண்மை அதன் பயன், திருவைந்தெழுத்தின் இயல்பு, அணைந்தோர் தன்மை ஆகியவை விரித்துரைக்கப் பெறுகின்றன. நூலின் இறுதியில் நூற்கருத்தும் கேட்டற்குரியார் யாவர் என்பதும் கூறப்பெற்றுள்ளன. உண்மையை உணர வேண்டுமென்னும் வேட்கையும் தகுதியும் உடையவர்க்குத் தீட்சையளித்து இந் நூலைக் கற்பிக்குமாறு ஆசிரியர் கூறியிருப்பது இந்நூற் பெருமையையும், சைவசித்தாந்தப் பயிற்று முறையையும் விளக்குவதாகும். சிவஞானபோதம் (மெய்யுணர்தல்) மிகின் சிவஞானம் சித்திக்கும். அது சித்திக்கவே உயிரிடத்துச் சிவம் பிரகாசிக்கும். இம்மூன்று நூல்களும் தம் பெயரானே இவ்வுண்மையைப் புலப்படுத்தி நிற்றலும் ஈண்டு அறியத்தக்கதாகும்.

(தொடரும்)

சைவ சமயச் சிறப்பு

திரு. சு, விசுவநாத முதலியார்

(மலர் 37. இதழ் 1, பக்கம் 16 இன் தொடர்ச்சி)

சமயாசாரியர் சிறப்பு:

சமயாசாரியர் நால்வருள் ஞானசம்பந்தருக்கு இறைவன் ஆசிரியத் தலைமையைத் தந்தருளினான். அஃது அவரது உணர்வில் உலகியல் சிறிதும் பற்றாதவாறு ஈராண்டு நிரம்பி மூன்றாவது ஆண்டு தொடங்கும் பொழுதே இறைவன் அவர் முன் தோன்றி அம்பிகையின் அருட்பாலை அளித்து உவமையிலாகக் கலைஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானம் இரண்டையும் தந்து நாவில் தனிச் சிவஞானசம்பந்தராகச் செய்து அருட்பாடல்கள் பலவற்றையும் அருளிச்செய்யுமாறு செய்தமையாலும் பின்னும் அவர் ஏறுதற்கு முத்துச் சிவிகை, ஊதுதற்கு முத்துச் சின்னம், பிடிப்பதற்கு முத்துக்குடை, முத்துப்பந்தல் இவைகளை இறைவன் தானே வழங்கிச் சிறப்புச் செய்தமையாலும் நன்கு உணரப்படும். அதனால் அவ்வருட் குறிப்பின்படியே அவர் அத்தலைமையை ஏற்று ஆணை மொழி கூறி, அருளாட்சி செலுத்தி வந்தார்.

அப்பர் பெருமான், ஆசிரியர்களது அருள்மொழிகளைச் சொல்லளவில் உணர்தல்மட்டும் போதாது, செய்கையில் பல தொண்டுகளைச் செய்வதே பயன்பெறும் வழியாகும் என்பதைப் பல திருப்பாடல்கள் வாயிலாக வற்புறுத்தி வந்ததோடன்றித் தாமும் கைத்தொண்டு செய்து மக்களைத் தொண்டு நெறியிற் செலுத்தினார். இவற்றை நோக்கியே சேக்கிழார் இவ்விரு பெருமக்களையும்,

> " பொருட்சமய முதற் சைவ நெறிதான் பெற்ற
> புண்ணியக் கண் இரண்டு "

என்று சைவ சமயத்தின் இரு கண்களாகக் கூறினார்.

சுந்தரர் ஆண்டவனுக்குச்செய்யும் தொண்டோடு தொண்டு நெறி முடிந்துவிடவில்லை; அடியார்க்குச் செய்யும் தொண்டினாலேதான் தொண்டு நெறி முற்றுப் பெறுகின்றது என்பதை விளக்கியருளினார். அதனால் அவரைச் சேக்கிழார்,

"தேசம் உய்யத் திருத்தொண்டத்
தொகை முன் பணித்த திருவாளன்"

என்று குறித்தார்.

மாணிக்கவாசகர் ஆண்டவனது பெருமை, அடியவரது பெருமை, அவர்கட்குச் செய்யும் தொண்டினது பெருமை முதலியவற்றை உணர்வினல் உணர்ந்து அங்ஙனம் உணர்ந்த தன் பயனாக 'என்பு நைந்துருக, நெக்கு நெக்கு ஏங்கி அன்பெனும் ஆறு கரையது புரள, நன்புலன் ஒன்றி நாத என்ற தன்றி உரை தடுமாறி உரோமம் சிலிர்ப்பக் கரமலர் மொட்டித்து இருதயம் மலரக் கண்களினின்று நுண்துளி அரும்பச் - சாயா அன்பினை நாள்தொறும் தழைக்கச் செய்தல்வேண்டும்' அத்தகைய அன்பு ஒன்றே ஆண்டவன் விரும்புவது என்பதை விளக்கியருளினர். இன்னும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் சைவ சமய நெறி நான்கையும் அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் நால்வரும் முறையே ஒருவாறு விளக்கினர் எனவும் கூறுவர். இந்நால்வரது வரலாறுகளை ஒருவாறாகவேனும் மக்கள் உணர்தல் வேண்டும்.

சந்தானுசாரியர் சிறப்பு:

சமயாசாரியர்கட்குப் பின்னர் நம்பியாண்டார் நம்பிகளாலும் சேக்கிழாராலும் திருமுறை பன்னிரண்டும் நிரம்பி விளங்கின. அதனுல் அவர்கள் காலம் வரையில் சமயாசாரியர்களது திருவருள் நெறி அவ்வண்ணமே இனிது நிகழ்ந்துவந்தது. ஆயினும் சேக்கிழார் காலத்தை அடுத்துத் தமிழ்நாட்டில் கேவலாத்துவிதம், விசிட்டாத்துவிதம் முதலிய தத்துவ வாதங்கள் மிகுந்து மதாசாரியர்கள் எனப்பெயர் பெற்றவர்கள் வேதவியாசர் செய்த பிரம்ம சூத்திரத்திற்கு எழுதிய பாடியங்கள் சிறப்புற்று விளங்கித் தமிழ் நாட்டிலும் சைவ நன்னெறி பொலிவிழக்கும் நிலை உண்டாயிற்று. அப்பொழுது தோன்றி, பல சாத்திரங்கள் வாயிலாகவும், உபதேச வாயிலாகவும் சைவ சமயத்தை நிலை நாட்டினவர்கள் சந்தானுசாரியர்கள்.

திருக்கயிலையில் தென்முகக் கடவுள்பால் உபதேசம் பெற்ற நந்தி தேவரிடமிருந்து அவ்வுபதேச ஞானத்தை சனற்குமார முனிவர், சத்திய ஞான தரிசனிகள் வழியாகப் பெற்ற பரஞ்சோதி மாமுனிகள், திருவெண்ணெய்நல்லூரில் பிள்ளைமைப் பருவத்திலே சாமுசித்தராய் எழுந்தருளியிருந்த சுவேதனப் பெருமாளியம் எழுந்தருளிவந்து தமது உபதேசத்தைச்செய்து மெய்கண்டார் எனத் தீட்சா நாமமும் தந்து சென்ருர். அவரே முதற் சந்தானுசாரியர்.

மெய்கண்ட தேவர் பால் அருணந்தி சிவாசாரியரும், அவர் பால் மறைஞான சம்பந்தரும், அவரிடம் கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியரும் உபதேசம் பெற்றனர். இதுவே திருக் கயிலாய பரம்பரையாகும். இந்த ஞான பரம்பரையில் தோன்றி விளங்கும் சைவ ஆதீனங்கள் பதினெட்டு என்பர். எனினும் துறைசை ஆதீனம், திருத்தருமையாதீனம், மதுரை திருஞான சம்பந்தர் ஆதீனம், திருவண்ணாமலை குன்றக்குடி ஆதீனம், காஞ்சிபுரம் ஸ்ரீ ஞானப்பிரகாசராதீனம் என்பவையே இன்று நாம் அறியதக்க நிலையில் உள்ளன.

இவைகள் சந்தானுசாரியர்கள் வழிநின்று ஞானத்தைப் பல்லாற்றானும் வளர்க்கும் ஞானப்பண்ணைகளாய்த் திகழ்கின்றன. இவைகளில் எந்த ஆதீனத்தையாவது அடைந்து சமயதீட்சை, விசேட தீட்சைமுதலிய தீட்சைகளைப்பெற்று சைவ அனுட்டானங்களை மேற்கொண்டு ஒழுகிப்பயன்பெறுதல் சைவர் அனைவருக்கும் தலையாய கடமையாகும் (பல்லாண்டுகளாக நிலையான சைவ சமய வளர்ச்சிப் பணியில் பெருந்தொண்டு ஆற்றி வருவது சைவ சித்தாந்த மகா சமாஜம். ஞானியார் சுவாமிகள், மறைமலை அடிகள், திரு. வி. க. போன்ற சைவப்பேரறிஞர்களால் போற்றி வளர்க்கப்பெற்ற சைவ சித்தாந்த மகாசமாஜம் 1929 ல் திருநெல்வேலியில், எதிர்காலத்தில் சைவ சமயப்பெரு வளர்ச்சி நோக்கி ஆராய்ந்தது. பிறகு இங்கே மாயூரத்தில் இன்று 6—11—77ல் மறுமுறையும் ஆராயக்கூடியுள்ளது. பழமையும், பெருமையும் மிக்க சைவ-சமயத்தை மக்களுக்குப் பயன்படும் நெறியாக வளர்ப்பது எப்படி என்பதுபற்றிச் சில கருத்துக்களை என் உரையில் குறிப்பிட விரும்புகின்றேன்.

சிறந்த அருளாளர்களும், உயர்ந்த ஞானியரும், ஈடு இணை இல்லாத சாத்திர - தோத்திரங்களும் நம்மிடையே உண்டு. இருந்தும் நாம் நமது தொன்மைச் சமயத்தை இன்னும் விரிவாக மக்கள் மத்தியிலே உலவ விடவில்லை. சைவர்களாக விளங்கும் ஒவ்வொருவரும் நம்மால் இயன்ற அளவு தொண்டாற்றி இச்சமய வளர்ச்சிக்கு உதவ வேண்டும் என்று இந்நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

1. பெருஞ்செல்வர்கள், வணிகர்கள், தொழிலதிபர்கள் தங்களது வருவாயில் ஒரு சிறு பகுதியையாவது சமய வளர்ச்சிக்காக ஒதுக்க முன்வருவது இன்றுள்ள நிலையில் இன்றியமையாததாகிறது.

2. பெருமையும் - அருளிப்பாடும் மிக்க நமது சைவத் திருமுறைகளைச் சிறு சிறு வெளியீடுகளாகப் பல்லாயிரக் கணக்கில் அச்சிட்டுத் தமிழகத்து மூலை முடுக்குகளிலுள்ள மக்களுக்கு எல்லாம் வழங்க வேண்டும்.

3. சைவத்தின் உயிர் நாடியாக விளங்கியவர்களும் வாழ்ந்து காட்டியவர்களுமாகிய சைவச்சீரடியார்களின் அருள் வாழ்வையும் அதில்காணப்படும் உறுதி, மற்றும் பண்பாட்டினையும் மக்களுக்கு நெஞ்சம் கொள்ளுமாறு விரித்துரைக்க வேண்டும்.

4. அரிய சமய உண்மைகளைப் பிற மொழிகளில் மொழி பெயர்த்து உலக சமயங்களோடு சைவத்தை ஒப்ப வைத்து நோக்கி ஆராயும் ஆராய்ச்சிக்கு வழி கோல வேண்டும்.

5. நமது சமயத்தின் பேரடையாளச் சின்னங்களாக விளங்கும் திருக்கோயில்கள் மற்றும் திருமடங்களுக்குத் தீமை ஏதும் வாராமல் உயிரெனப் பாதுகாக்க வேண்டும்.

6. இளைஞர்களை ஈர்க்கும் வகையில் சமயப் பிரசாரத்தினை ஊக்குவித்து அவர்களைச் சைவத்தின் காவலர்களாக மாற்ற வேண்டும்.

7. தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி போன்றவற்றில் சைவ - சமயக்கருத்துக்களை மாணவர்களுக்கு உரிய வகையில் போதிக்கத் தக்க ஏற்பாடுகள் செய்தல் வேண்டும்.

8. கல்வி மற்றும் மருத்துவப் பணிகளையும் சைவத்தின் பெயரால் ஏற்று மக்கள் தொண்டுகளில் சைவத்தை இணைக்க வேண்டும்.

9. சமய - சந்தானாசாரியர்களின் திருநாட்களை விரிவாகக் கொண்டாடி மக்கள் நெஞ்சில் சமய உணர்ச்சியை ஆழ ஊன்றிடச் செய்தல் வேண்டும்.

10. வாழ்வோடு இணைந்ததாக சைவம் அமையுமாறு அதனை மாற்றிட அறிஞர்கள் முயன்றிட வேண்டும்.

11. நாடு முழுவதும் ஊர்கள் தோறும் சமய சங்கங்கள் நிறுவிட வேண்டும். இப்பொழுது உள்ள சமயத்தொடர்பான மன்றங்களை ஒருங்கிணைத்து ஒரு தலைமையில் கொண்டுவரச் செய்ய வேண்டும்.

12. சைவ சமய ஆசாரியர்களாக விளங்கும் குருமகாசந்நிதானங்களை வணங்கிப்போற்றி அவர்கள் வழிநின்று சமய நெறிகளை வளர்க்கும் முறையை உருவாக்க வேண்டும்.

13. திருக்கயிலாய பரம்பரையில் மெய்கண்டார் மரபில் பன்னெடுங்காலமாக இந்நாட்டில் தமிழ் மொழியையும் சைவ சமயத்தையும், சமய நூல்களையும் காத்துவரும் அரண்களாக

விளங்கும் அந்நிறுவனங்களைப் போற்றுவது சமய வளர்ச்சிக்கு அடிப்படையானது என்பதை அனைவர்க்கும் உணர்த்த வேண்டும்.

14 ஆண்டுக்கு ஒருமுறை பெரிய நகரங்களில் மாநாடுகள் நடத்திச் சமய உண்மைகளை மக்கட்கு உணர்த்தவேண்டும்.

15 சைவ சமய ஒழுக்கங்கள், நம் பண்டிகைகளின் தத்துவங்கள் முதலியவற்றை அவ்வப்போது மக்கள் அறியும்படியாகச் செய்தல் வேண்டும்.

16 சைவ சமயிகள் தங்கள் சிறுவர்களை, 12 வயதிற்குள் சமய தீக்ஷை செய்துகொண்டு அனுட்டானம் செய்வித்தும், திருமணமானபின் சிவபூசை செய்வித்தும் சமய நெறிகளில் ஈடுபடுத்துதல் வேண்டும்.

17. இவைகளுக்கு நிதி சேர்ப்பதற்கு சைவ, இந்து மதச் சார்புள்ள மக்களை அணுகி அவர்களிடம் நமது சமயப்பிரசாரம் பிணி நீக்குதல் முதலியவைகளைச்செய்து அவர்களைச் சமாஜ அங்கத்தினர்களாகச் சேர்த்து அவர்களிடம் வருடத்திற்கு ஒரு ரூபா சந்தா பெற்று, ஒவ்வொரு கிராமத்திலும் சங்கம் அமைத்து, அதனை நமது சென்னை தலைமைச் சங்கத்துடன் இணைத்தல் வேண்டும்.

18 கிராம சங்க அங்கத்தினர்களிடம் பெறும் சந்தாதொகை ரூபாய்ஒன்றில் கிராம சங்கத்திற்கு 50 பைசாவாகவும், தாலுக்கா அல்லது ஜில்லா சங்கத்திற்கு 25 பைசாவாகவும் தலைமைச்சங்கத்திற்கு 25 பைசாவாகவும் அளிக்க வேண்டும்.

19. தலைமைச்சங்கம் நமது சைவ சமயக் கொள்கைகள், தத்துவ விளக்கம் மக்கள் நல் வாழ்விற்குரிய நூல்களைச் சிறிய அளவில் எல்லோரும் புரிந்துகொள்ளும் நடையில் தக்கவர்களைக் கொண்டு தயார் செய்து அவைகளைக் குறைந்த விலையில் அளித்தல் வேண்டும்.

20. நம் அரசாங்கம் மதச்சார்பற்றது. ஆனாலும் அதன் துணையின்றித் தர்மஸ்தாபனங்கள் இயங்கமுடிவதில்லை. நமது தர்மஸ்தாபனங்கள் தம் அறப்பணிகளைச்செய்ய மக்கள் ஆவன செய்யவேண்டும். இன்னோரன்ன பணிகளைச்செய்து போற்றும் நிறுவனமாக வளர்ந்து பணிகள் புரிந்து சிறப்படைய, எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன்.

உ

சிவமயம்

ஆயில்யத்திருநாள் ஆலய வழிபாடு

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பதும், 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பதும் நம்நாட்டில் வழங்கும்பழமொழிகள். மக்களைத்திருக்கோயில் வழிபாட்டில் ஈடுபடுத்தி, சைவ - சமயப் பெருமைகளை அறியச்செய்து உய்விக்கவேண்டும் என்ற பெருங்கருணை யால் தருமையாதீனம் 26-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், தமது குருமூர்த்திகள் காட்டியருளிய வழியி லேயே தமது ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திரு நாளிலும் பாடல்பெற்ற தலங்கள்தோறும் முறையான வழி பாட்டிற்கு வழிகாட்டி வருகிறார்கள். காவிரி வடகரைத் தல வழிபாடு திருஈங்கோய்மலையோடு நிறைவுறுகிறது. மாசி ஆயில்யம்முதல் காவிரித்தென்கரைத்தலவழிபாடுதொடங்கி நிகழவுள்ளது. உழவாரப்பணி, விசேட அபிடேக ஆராதனைகள், தலத் திருப்பதிகங்களை அச்சிட்டு ஓதி வழங்குதல், சமயப்பிரசாரம்முதலியன ஆயில்யத்திருநாள் வழிபாட்டின் அங்கங்களாகும்.

நிகழும் பிங்களஹு தைத்திங்கள் 12 - ஆம் நாள் (25—1—78) புதன்கிழமையன்று மாத ஜன்மநட்சத்திர மாதலின் திருஈங்கோய்மலை ஸ்ரீ மரகதாம்பிகை உடனுறைய ஸ்ரீ மரகதாசலர் திருக்கோயிலில் மாலை 6-00 மணி முதல் அபிஷேக ஆராதனைகளும் வழிபாடும் நடைபெறும்.

சமய விரிவுரைகளும் நடைபெறும்.

அனைவரும் வருக! வழிபட்டு உய்க! அரன் அருள் பெறுக!

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 26 - ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் மாதஜன்மநட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாள் வழிபாடு பாடல்பெற்ற தலங்களில் நடைபெறுவது அனைவரும் அறிந்ததே. மார்கழித்திங்கள் வழிபாடு 29—12—77 வியாழக்கிழமையன்று திருப்பாச்சிலாச்சிராமம் ஸ்ரீ பாலசுந்தரி உடனுகிய ஸ்ரீ மாற்றறிவரதர் திருக்கோயிலில் காலை 11 மணி அளவிலும், திருப்பைஞ்ஞீலி ஸ்ரீ விசாலாக்ஷி உடனுகிய ஸ்ரீ நீலகண்டர் திருக்கோயிலில் மாலையிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பாக நடைபெற்றது. வழிபாட்டின்போது திருவையாறு தருமையாதீனத் திருக்கோயில் ஓதுவார் திரு முருகையா தேசிகர் அவர்களாலும் திருச்சிராப்பள்ளி ஸ்ரீகாசி மடம் ஓதுவார் திரு. முத்துக்கந்தசாமி தேசிகர் அவர்களாலும் அவ்வத்தலத் தேவாரத் திருப்பதிகப் பாராயணம் செய்யப் பெற்றது. அவ்வத்தலத் தேவாரத்திருப்பதிகங்கள் அடங்கிய நூல் ஒன்றும் வெளியிட்டு அன்பர்களுக்கு வழங்கப்பெற்றது. வழிபாட்டில திருவானைக்கா பன்னிருதிருமுறை வாரவழிபாட்டுக் குழுவினரும் மற்றும் பல அன்பர்களும் கலந்துகொண்டு வழிபட்டுப் பயன் பெற்றனர், வழிபாட்டிற்குப்பின்னர் திருப்பைஞ்ஞீலி ஸ்ரீ.நீலகண்டர் திருக்கோயிலில் கோவந்தக்குடி, திருப்பணிச் செல்வர், திரு. H. தாண்டவராயப்பிள்ளை அவர்கள் தலைமையில் சமய விரிவுரை நடைபெற்றது. திருவானைக்கா, புலவர்மாமணி, நல்லாசிரியர், வித்துவான், திரு. அரங்கசாமி அவர்கள் " ஞானசம்பந்தர் " என்ற தலைப்பிலும், திருச்சிராப்பள்ளி முத்தமிழ் அரசு, இலஞ்சி. திரு. முத்துக்குமாரசாமி அவர்கள் " அப்பர் " என்ற தலைப்பிலும், புலவர். திரு. மு. வைத்தியநாதன் அவர்கள் " சுந்தரர் " என்ற தலைப்பிலும், தருமையாதீனத் தமிழ்ப்புலவர், வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., அவர்கள் " மணிவாசகர் " என்ற தலைப்பிலும் விரிவுரையாற்றினர்கள். அன்பர்கள் பலர் வந்து வழிபட்டும் விரிவுரைகளைக் கேட்டும் பயன் பெற்றனர்.

கோவந்தக்குடி, திருப்பணிச்செல்வர், திரு. H தாண்டவராயப்பிள்ளை அவர்கள் தமது குடும்பத்தினருடன் வழிபாட்டில்

கலந்துகொண்டு வழிபாட்டிற்கு வந்திருந்த அன்பர்களுக்கு இரவு சிற்றுண்டி வழங்கிச் சிறப்பித்தார்கள்.

தருமையாதீனத்தில் குருபூஜை விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் இரண்டாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீல ஸ்ரீ ஆனந்தபரவச தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை விழா 28—12—77 புதன்கிழமையன்று குருமூர்த்த ஆலயத்தில் சிறப்பாக நடை பெற்றது. அன்று காலை மாலை இருவேளைகளிலும் ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தி வழிபாடாற்றினார்கள்.

சைவ மெய்யன்பர்கள் பலர் வந்து வழிபட்டுக் குருவருள் பிரசாதம் பெற்றனர். மாலை வழிபாட்டின்போது ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானம் அவர்கள் சந்தானாசாரியருள் முதலாமவராகிய மெய்கண்டார் அருளிய "சிவஞான போதம்" என்ற சாத்திர நூலைத் "திருக்கோயில்" இதழாசிரியரும், தருமையாதீனப் புலவருமான திரு. ந. ரா. முருகவேள் எம். ஏ., அவர்களால் எழுதப்பெற்ற தெளிபொருளுடன் வெளியிட்டு வழங்கியருளி னார்கள்.

அன்றுகாலை வழிபாட்டிற்குப் பின்னர் ஆதீனத் திருக் கூட்டத்து அடியவர்கள், கல்லூரிப் பேராசிரியர்கள் ஆதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்பள்ளி ஆசிரியர்கள், ஆதீன வேத சிவாகம பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோர் பன்னிருவர் சிவ ஞானபோதப் பன்னிரண்டு சூத்திரப் பொருளையும் விளக்கி விரி வுரையாற்றினார்கள். அன்பர்கள் பலர் கேட்டுப் பயன்பெற்றனர்.

சீகாழியில் ஊஞ்சல் திருவெம்பாவை உற்சவம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்த மான சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் ஊஞ்சல் திருவெம்பாவை உற்சவம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர் களின் அருளாணையின் வண்ணம் சிறப்பாக நடைபெற்றது. 17—12—77 முதல் 26—12—77 வரை உள்ள பத்து நாட்களிலும் இறைவன் ஆன்மாக்கள் இன்பம் பெறும் பொருட்டு ஊஞ்ச லாடும் விழாவும் திருவெம்பாவை உற்சவமும் இனிதே நிகழ்ந் தன. திருவாதிரைத் திருநாள் நடராஜப் பெருமானுக்கு உரிய திருநாள். அந்நாளில் ஸ்ரீ நடராஜப் பெருமான் திருவீதியுலா வாக எழுந்தருளிப் பக்தர்களுக்குக் காட்சி வழங்கியருளினார்.

6—1—78 அன்று திருஞானசம்பந்தர் திருக்கோயிலில் புலவர். திரு இரா. செல்வக்கணபதி எம். ஏ., அவர்களின் 'திருவெம்பாவை' பற்றிய சிறப்புச் சொற்பொழிவு நிகழ்ந்தது. அன்பர்கள் பலரும் வந்து வழிபட்டும் விரிவுரையைக் கேட்டும் பயன் பெற்றனர்.

வேளூரில் பொன்னூசல் திருவிழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமை யாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் 16—12—77 வெள்ளிக்கிழமை முதல் தொடங்கி 26—12—77 முடிய உள்ள நாட்களில் பொன்னூசல் திருவிழா சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ தையல்நாயகி உடனாகிய ஸ்ரீ வைத்தியநாதப் பெருமான் ஊஞ்சலில் எழுந்தருளலும் காலை மாலை இரு வேளைகளிலும் திருவெம்பாவைஓதிவழிபடுதலும் நிகழ்ந்தன. 26—12—77 அன்று ஸ்ரீ நடராசப்பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் திருவாதிரைத் தரிசனமும் நடைபெற்றன.

3—1—78 செவ்வாய்க்கிழமை மாலை 6-மணி அளவில் தருமை ஆதீனப் பல்கலைக்கல்லூரித் துணைப்பேராசிரியர் வித்துவான் திரு மு. சிவச்சந்திரன் எம். ஏ., அவர்கள் 'பாவைப் பாடல்கள்' என்ற தலைப்பில் விரிவுரையாற்றினர்கள். அன்பர்கள் பலர் வழிபட்டும் விரிவுரையைக் கேட்டும் பயன்பெற்றனர்.

ஆதீனத் திருக்கோயில்களில்

திருவெம்பாவை விரிவுரை

நம்முடைய ஓர் ஆண்டுக்காலம் தேவர்களுக்கு ஒருநாள் என்றும் மார்கழி மாதம் தேவர்களுக்குரிய விடியற்காலம் என்றும் சிறப்பாகப் பேசப்பெறுகிறது. இம்மார்கழி மாதத்தில் திருவாதிரையை இறுதியாகக்கொண்ட பத்து நாட்கள் திருமுறைகளை ஓதாமல் (காப்பிட்டு) திருவெம்பாவைப் பாடல்களை மட்டும் ஓதுவதை அனைவரும் அறிவர். அத்தகைய சிறப்பிற்குரிய திருவெம்பாவை பற்றிய விரிவுரைகள் ஆண்டுதோறும் ஆதீனத் திருக்கோயில்கள் எல்லாவற்றிலும் நடைபெறுகின்றன. அம்முறையில் இவ்வாண்டு திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கோயில்களில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் அருளாணையின்வண்ணம் திருவெம்பாவைச் சொற்பொழிவுகள் சிறப்பு வழிபாட்டுடன் நடைபெற்றன.

26—12—77 திங்கட்கிழமை திருவாதிரைத் திருநாள். அன்று மணக்குடிஸ்ரீசுந்தரேசுவரசுவாமிதேவஸ்தானத்தில் ஸ்ரீ நடராசப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் ஸ்ரீ நடராசப் பெருமான் திருவீதியுலாக் காட்சியும் நடைபெற்றன. அன்று காலை ஆதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர் புலவர். திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ., அவர்கள் 'பாவைப் பாடல்கள்' என்னும் தலைப்பில் விரிவுரையாற்றினார்கள்.

3—1—78 செவ்வாய்க்கிழமையன்று திருக்கடவூர் ஸ்ரீ அபிராமி அம்மை உடனுறைய ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியை வித்துவான். திருமதி. ப. நீலா எம். ஏ., அவர்கள் "பாவை நோன்பு" என்ற தலைப்பில் விரிவுரையாற்றினார்கள்.

6—1—78 வெள்ளிக்கிழமையன்று திருப்பனந்தாள் ஸ்ரீபெருகந் நாயகி உடனுறைய ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வரும், தருமையாதீனப் புலவருமான வித்துவான். திரு. வி. சா. குருசாமிதேசிகர் அவர்கள் "மார்கழி நீராடல்" என்னும் பொருள்பற்றியும்; பேரளம் ஸ்ரீ பவானி அம்மை உடனுறைய ஸ்ரீ சுயம்புநாத சுவாமி தேவஸ்தானத்தில் தருமையாதீனம் வித்துவான். திரு. மு. ஆறுமுக தேசிகர் அவர்கள் "திருவெம்பாவை" என்ற பொருள் பற்றியும், குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் ஆதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர் வித்துவான். திரு. மு. சிவச்சந்திரன் எம்.ஏ., அவர்கள் "திருவெம்பாவை" என்னும் பொருள் பற்றியும் விரிவுரையாற்றினார்கள்.

8—1—78 ஞாயிற்றுக்கிழமையன்று திருபுவனம் ஸ்ரீ அறம் வளர்த்த நாயகி உடனுறைய ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில், தருமையாதீனப் புலவர், வித்துவான். சிரோமணி திரு. வி. சபேசன் அவர்களால் "திருவெம்பாவை" என்ற தலைப்பிலும், திருவையாறு ஸ்ரீ அறம்வளர்த்தநாயகி உடனுறைய ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் தருமையாதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர், வித்துவான். திரு. கா. ம கண்ணப்பன் அவர்களால் "திருப் பள்ளியெழுச்சி" என்ற தலைப்பிலும் விரிவுரைகள் நிகழ்த்தப் பெற்றன. ஆங்காங்கும் அன்பர்கள் பலர் கேட்டுப் பயன் பெற்றனர்.

சென்னை, தருமபுர ஆதீன சமயப்பிரசார நிலையம்

நாயன்மார்கள் குருபூஜைகள் :

சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில் மெய்ப்பொருள் நாயனர், ஆனய நாயனர், மூர்க்க நாயனர், சிறப்புலி நாயனர், வாயிலார் நாயனர், சடைய நாயனர் இவர்கள் குருபூஜைகள் முறையே 5—12—77, 6—12—77, 11-12-77, 12—12—77, 19—12—77, 25—12—77 ஆகிய நாட்களில் நிலைய பூஜை மடத்தில் நடைபெற்றன. திரு. V. N ஆறுமுகம் அவர்கள் பெரிய புராணம் வாசித்து விளக்கம் செய்தார்கள். திருமுறை பயிலும் மாணவ, மாணவிகளும், ஸ்ரீ அப்பர் குருகுல மாணவர்களும், அன்பர்களும் கேட்டுப்பயனடைந்தனர். எல்லோருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

திருக்கடவூர் சங்காபிஷேகத்தீர்த்தப் பிரசாதம் வழங்கும்விழா

சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில் 5—12—77, 12—12—77 கார்த்திகை சோமவார நாட்களில் திருக்கடவூரில் நடைபெற்ற 1008 சங்காபிஷேகத் தீர்த்தப் பிரசாதம் முறையே 6—12—77; 13—12—77 தேதிகளில் நிலைய மன்றத்தில் பிரார்த்தனை நிகழ்த்தி அன்பர்களுக்கு வழங்கப்பட்டது. பிரார்த்தனையின்போது ஸ்ரீ அன்னை அபிராமிக்கு அஷ்டோத்ர அர்ச்சனையும் திருக்கடவூர்ப் பதிகப் பாராயணமும் செய்யப்பட்டன.

திருவெம்பாவை விளக்கவுரை :

சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில் மார்கழி மாத ஆரம்பத்தில் 10 தினங்களுக்கு நிலைய மன்றத்தில் புலவர் திரு. K. பசுபதி அவர்கள் திருவெம்பாவைப் பாடல்களுக்கு விளக்கவுரை நிகழ்த்தினர்கள். திருமுறை பயிலும் மாணவ மாணவிகளும் ஸ்ரீ அப்பர் குருகுல மாணவர்களும் அன்பர்களும் கேட்டுப் பயனடைந்தனர்.

கிருத்திகைப்பிரசாதம் வழங்கும் விழா :

சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில் வைத்தீஸ்வரன்கோயில் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா 23—12—77 வெள்ளிக்கிழமை இரவு 7-மணிக்கு நடைபெற்றது.

ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிபடத்திற்கு அர்ச்சனை செய்தபிறகு நிலைய ஓதுவார் திரு. S. ஞானப்பிரகாசம் திருவெம்பாவைப் பாடல்களைப் பாடினர் புலவர் திரு கே. ஆறுமுகம் அவர்கள் வரவேற்புரை கூறுகையில் மார்கழி மாதத்தில் திருவெம்பாவை பாடுவதால் பல நன்மைகளைப்பெறலாம் என்று எடுத்துச் சொன்னார்கள். விழாவிற்குத் தலைமைவகித்த திரு R சிவஞானம் செட்டியார் அவர்கள் கிருத்திகைப்பிரசாதம் வழங்கும் விழா போன்ற கூட்டு வழிபாட்டு முறையின் நன்மைகளை எடுத்துச் சொல்லி, இவ்விதமாக வழிபாட்டு முறையை ஏற்படுத்தி வரும் தருமை ஆதீனத்திற்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். புலவர் திரு. K. ஆறுமுகம் நன்றியுரை கூறியபின் அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கப்பெற்றது.

தருமையாதீனம்

வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம்,

வைத்தீசுவரன்கோயில்.

சீகாழி வட்டம் – தஞ்சை மாவட்டம்.

திருவிளக்கு அறக்கட்டளை நிதி

காணிக்கை செலுத்தியவர்களின் பெயர் விபரமும் மாயூரம் இந்தியன் வங்கியில் உள்ள முதலீடுகள் விபரமும்

(மலர் 36, இதழ் 12, பக்கம் 610 இன் தொடர்ச்சி)

135	திரு. S. பெருமாள் முதலியார் & வள்ளிஅம்மாள் ஈரோடு	ரு.	1000
136	திரு. தர்மாம்பாள் இராமசாமி பெங்களூர்	ரு	1000
137	உண்டியல் நிதி	ரு.	1000
138	௸	ரு.	1000
139	திரு. R. சங்கர நாராயணன் சேலம்	ரு	1000
140	திரு. V. R. K. காசிநாதன் மலேசியா	ரு.	1000
141	பட்டுப் புடவை விற்றுமுதல் நிதி	ரு.	1000
142	௸	ரு	1000
143	திரு. S. ஆறுமுகம் அரக்கோணம்	ரு.	1000
144	திரு. S. வைத்தியநாதன் சென்னை – 83	ரு.	1000

தருமையாதீனம்

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின்

மார்கழி மாதச் சிறப்பு வழிபாடு

மார்கழி மாதம் பீடுடைய மாதம். மக்களின் ஓராண்டுக்காலம் தேவர்களுக்கு ஒருநாள். மார்கழி மாதம் தேவர்களுக்கு விடியற் காலம். ஆதலால் தருமை ஆதீனத் திருக்கோயில்களில் இம் மாதம் முழுவதும் விடியற்காலையில் திருப்பள்ளியெழுச்சி வழிபாடு வழக்கம்போல் சிறப்பாக நடைபெற்றது. இம்மாதத்தில் தெய்வ வழிபாட்டில் ஈடுபடுபவர்கள் இவ்வாண்டில் தொடங்கும் காரியங்கள் எல்லாம் நன்மையாகவே நிறைவேறும் என்பது ஆன்றோர் கொள்கை.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் நாள்தோறும் விடியற் காலையில் ஆன்மார்த்த மூர்த்தி ஸ்ரீ சொக்கநாதப்பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் திருப்பள்ளியெழுச்சிச் சிறப்பு வழிபாடு நிகழ்த்தி ஸ்ரீ ஞானபுரீசுவரர், ஸ்ரீ தருமபுரீசுவரர், ஸ்ரீ துர்க்காம்பிகை திருக்கோயில்களிலும் நாள்தோறும் காலை மாலை இருவேளைகளிலும் வழிபாடு ஆற்றியருளினார்கள். பின்னர் ஆதீனத்திருக்கோயில்களுக்கும் பிறதிருக்கோயில்களுக்கும் எழுந்தருளி உலக நலங்கருதி வழிபாடாற்றியருளினார்கள். வழிபாட்டுக் காலத்தில் அவ்வத்தலத் தேவாரத் திருப்பதிகங்கள் ஓதுவா மூர்த்திகளால் பாராயணம் செய்யப்பெற்றன.

திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கப் பெருமானை மூலஸ்தானமாகவும், திருவலஞ்சுழி விநாயகப்பெருமானையும், சுவாமிமலை ஸ்ரீ சுப்பிரமணியப்பெருமானையும், ஆலங்குடி ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திப் பெருமானையும், தில்லை நடராஜப்பெருமானையும், சீகாழி ஸ்ரீ சட்டைநாதரையும் (பைரவர்) திருவாரூர் சோமாஸ்கந்தப் பெருமானையும் (தியாகராஜர்) சூரியனார்கோவில் நவக்கிரக மூர்த்தத்தையும் திருஆப்பாடி சண்டிகேசுவரரையும் திருவாவடுதுறை நந்தியையும் பரிவார தெய்வங்களாகக் கொண்டு வழிபடுவதைச் சைவசமயச்சான்றோர்கள் மரபாகக்கொண்டுள்ளனர். சோழநாட்டையே சிவாலயமாகக் கூறுகிறது "திருவலஞ்சுழி ஐங்கரத்தான்" - என்று தொடங்கும் க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத் தமிழ். அம்முறைப்படி மார்கழிமாதத் தல வழிபாட்டில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அவ்வத்தலங்களுக்கும் சென்று தரிசனம் செய்தது குறிப்பிடத்தக்கது.

18—12—77 அன்று குத்தாலம் ஸ்ரீ மிருதுமுகிழாம்பிகை உடனுகிய ஸ்ரீ உக்தவேதீசுவரசுவாமி திருக்கோயில் 19—12—77ல் திருநின்றியூர் ஸ்ரீ உலகநாயகிஉடனுகிய ஸ்ரீலட்சுமிபுரீசுவரசுவாமி திருக்கோயில், 21—12—27ல் குறுக்கை ஸ்ரீ ஞானம்பிகை உடனுகிய ஸ்ரீ விரட்டேசுவரசுவாமி திருக்கோயில், 23—12—77 அன்று சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி திருக்கோயில், திருமுல்லைவாயில் ஸ்ரீ கோதையம்மை உடனுகிய ஸ்ரீ முல்லைவனநாதசுவாமி திருக்கோயில்கள் 24—12—77 ல் மணக்குடி ஸ்ரீ சௌந்தர நாயகி உடனுகிய ஸ்ரீ சுந்தரேசுவரசுவாமி திருக்கோயில், கருங்குயில் நாதன்பேட்டை ஸ்ரீ ஆனந்தவல்லியம்மை உடனுகிய ஸ்ரீ சக்திபுரீசுவரசுவாமி திருக்கோயில்கள் 25—12—77 ல் திருபுவனம் ஸ்ரீ அறம்வளர்த்தநாயகி உடனுகிய ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி திருக்கோயில் 28—12—77 ல் தலைஞாயிறு ஸ்ரீ கோல்வளைநாயகி உடனுகிய ஸ்ரீ குற்றம்பொறுத்தீசுவரசுவாமி திருக்கோயில், 29—12—77 அன்று காரைக்கால் தருமபுரம் ஸ்ரீ மதுரமின்னம்மை உடனுகிய ஸ்ரீ யாழ்மூரிநாதசுவாமி திருக்கோயில், திருநள்ளாறு ஸ்ரீ போகமார்த்தபூண்முலையம்மை உடனுகிய ஸ்ரீ தர்ப்பாரண்யேசுவரசுவாமி திருக்கோயில், 30—12—77 அன்று விளநகர் ஸ்ரீ தோழியம்மை உடனுகிய ஸ்ரீ துறைகாட்டும்வள்ளலார்சுவாமி திருக்கோயில், 31—12—77 அன்று மாயூரம் ஸ்ரீ விசாலாட்சி அம்மை உடனுகிய ஸ்ரீகாசிவிசுவநாதர் திருக்கோயில், 3—1—78ல் திருவையாறு ஸ்ரீ தர்மசம்வர்த்தனியம்மை உடனுகிய ஸ்ரீபஞ்சநதீசுவரசுவாமி திருக்கோயில், 4—1—78 அன்று பேரளம் ஸ்ரீபவானி அம்மை உடனுகிய ஸ்ரீசுயம்புநாதசுவாமி திருக்கோயில், 5—1—78 அன்று திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி திருக்கோயில், 6—1—78 அன்று திருப்பறியலூர் ஸ்ரீ இளங்கொம்பனையாள் உடனுகிய ஸ்ரீ விரட்டேசுவரசுவாமி திருக்கோயில், 10—1—78 அன்று ஆச்சாள்புரம் ஸ்ரீதிருவெண்ணீற்றுமையம்மை உடனுகிய ஸ்ரீ சிவலோகத்தியாகராஜசுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினுர்கள்.

மற்றும் 16—12—77. 30—12—77 இவ்விரு நாட்களிலும் திருக்கடவூர் ஸ்ரீ அபிராமி அம்மை உடனுகிய ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி திருக்கோயிலுக்கும் 22—12—77, 29—12—77, 5—1—78 இந்நாட்களில் மாயூரம் - வள்ளலார்கோயில் ஸ்ரீ ஞானம்பிகை உடனுகிய ஸ்ரீ வதான்யேசுவரசுவாமி திருக்கோயிலுக்கும் 20—12—77, 22—12—77, 27—12—77, 10—1—78 ஆகிய நாட்களில் வேளூர் ஸ்ரீ தையல்நாயகியம்மை உடனுகிய ஸ்ரீ வைத்தியநாதசுவாமி திருக்கோயிலுக்கும் 17-12-77, 6, 7, 9-1-78 ஆகிய

நாட்களில் தருமபுரம் ஸ்ரீ அபயாம்பிகை உடனுகிய ஸ்ரீ தரும புரீசுவரர் திருக்கோயிலுக்கும் எழுந்தருளி அவ்வத்தலங்களில் அபிஷேக ஆராதனைகள் அர்ச்சனைகள் நிகழ்த்தி வழிபாடாற்றி யருளினுர்கள். திருபுவனம் திருக்கோயிலில் அபிஷேக ஆராதனை களுடன் சரபவேள்வியும் சிறப்பாக நிகழ்த்தப்பெற்றது.

25—12—77 அன்று திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடு துறை ஆதீனத்திற்குச் சொந்தமான ஸ்ரீ சூரியனர்கோயிலில் வழிபாடாற்றியும் 1—1—78 புத்தாண்டுப் பிறப்பன்று மாயூரம் ஸ்ரீ அபயாம்பிகை உடனுகிய ஸ்ரீ மாயூரநாதர் திருக்கோயிலுக்கு எழுந்தருளி ஸ்ரீ மாயூரநாதரையும் ஸ்ரீ அபயாம்பிகையையும் வழிபட்டு, தருமையாதீனத்திற்குச் சொந்தமான குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ வள்ளிதேவ சேனை உடனுகிய ஸ்ரீ சுப்பிரமணியசுவாமியையும் வழிபட்டு அன்பர்களுக்கு பிரசாதம் வழங்கியருளினுர்கள். 2—1—78 அன்று திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமி திருக்கோயிலுக்கு எழுந் தருளி தருமையாதீனம் பிச்சக்கட்டளை சார்பில் அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்திவழிபாடாற்றினுர்கள். மேலும் 2—1—78ல் ஸ்ரீ ஆலங்குடி ஸ்ரீ தக்ஷிணமூர்த்தி திருக்கோயிலுக்கும் 3—1—78 அன்று திருவலஞ்சுழி ஸ்ரீ பெரியநாயகியம்மை உடனுகிய ஸ்ரீ கற்பகநாதேசுர சுவாமி திருக்கோயில், சுவாமிமலை ஸ்ரீ சுவாமி நாதசுவாமி திருக்கோயில்களுக்கும் 27—12—77 அன்று திருப்புன்கூர் ஸ்ரீ சிவலோகநாதசுவாமி திருக்கோயிலுக்கும் எழுந் தருளி வழிபாடாற்றினுர்கள்.

21—12—77 வைகுண்ட ஏகாதசியன்று திருவழுந்தூர் ஸ்ரீ பரிமளரங்கநாதசுவாமி திருக்கோயிலுக்கு எழுந்தருளி அர்ச்சனை ஆராதனைகளுடன் வழிபாடு நிகழ்த்தியருளினுர்கள்.

அவ்வத் தலங்களிலும் திருக்கோயில் மேற்பார்வையாளர்கள் சிவாச்சாரியர்கள் ஆகியோர் பூர்ண கும்பம் முதலிய கோயில் மரியாதைகளுடன் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை வரவேற்று வழிபாட்டின்போது உடனிருந்து உதவினுர்கள். திருவிடைமருதூரிலும் மாயூரத்திலும் திருவாவடுதுறை ஆதீனத் திற்குச் சொந்தமான திருக்கோயில் நிர்வாகிகளும் கட்டளை விசாரணை தம்பிரான் சுவாமிகளும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை வணங்கி வரவேற்ருர்கள்.

சிதம்பரம் வழிபாடு

26—12—77 அன்று சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயி லுக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவாதிரை

தரிசனத்திற்கு எழுந்தருளி தில்லையம்மனை வழிபட்டு ஆயிரக்கால் மண்டபத்தில் ஸ்ரீ நடராஜப்பெருமானுக்கு சாதரா சாத்தச்செய்து லட்டுபாவாடை நிவேதனம்செய்து வழிபாடாற்றி அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கி ஆசியருளினார்கள். அன்று சிதம்பரம் தருமையாதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமடத்தில் டாக்டர் திரு. K. அரங்கசாமிப் பிள்ளை திரு. பொன்னம்பலம் பிள்ளை திரு. R. கனகசபைப் பிள்ளை திரு. திருநாவுக்கரசுபிள்ளை திரு. G. வாகீசம்பிள்ளை முதலிய சிதம்பரம் நகரப் பெருமக்களும் பக்தர்களும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை வரவேற்று வழிபட்டுப் பிரசாதம் பெற்று மகிழ்ந்தனர். தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு. M. K. பாலசுப்பிரமணியம் I. A. S. அவர்களும் துணையாணையர்களும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை வரவேற்று வழிபாட்டின்போது உடனிருந்து தரிசித்தார்கள்.

முசுகுந்தார்ச்சனை

5—1—78 அன்று ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவாரூர் ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்திற்கு எழுந்தருளி ஸ்ரீ புற்றிடங்கொண்டநாதரையும் ஸ்ரீ தியாகராஜப் பெருமானையும் சித்தீச்சுரம் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியையும் வழிபட்டு ஸ்ரீ தியாகராஜப்பெருமானுக்கு முசுகுந்த சகஸ்ரநாம அர்ச்சனை செய்வித்து வழிபாடாற்றி ஆசியருளினார்கள்.

11—1—78 அன்று உய்யக்கொண்டான் தருமையாதீனம் ஸ்ரீ அஞ்சனாட்சி உடனுறைய ஸ்ரீ உஜ்ஜீவநாதசுவாமி திருக்கோயிலில் வழிபாடும், திருச்சிராப்பள்ளி ஸ்ரீ மௌனமடத்திற்கு எழுந்தருளி ஸ்ரீ மட்டுவார்குழலம்மை உடனுறைய தாயுமானேசுவரர் திருக்கோயிலில் வழிபாடும் நிகழ்த்தியருள்வார்கள். 12—1—78 அன்று மாயூரம் வள்ளலார்கோயில் தருமையாதீனம் ஸ்ரீ வதான்யேசுவரசுவாமி திருக்கோயிலிலும் 13—1—78 அன்று திருப்பனந்தாள் ஸ்ரீ பிருகந்நாயகி உடனுறைய ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி திருக்கோயிலிலும் வழிபாடு நிகழ்த்தி திருஆப்பாடி, திருச்சேய்ஞலூர்களில் ஸ்ரீ சண்டிகேசுவரரையும் வழிபட்டு மார்கழி மாதச் சிறப்பு வழிபாட்டை நிறைவு செய்தருள்வார்கள்.

எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(பிங்களஹு தைமீ 1உ முதல் 30உ முடிய)
(14—1—1978 முதல் 12—2—1978 முடிய)

கேது சந்			குரு
ல/	இராசி		செ
சூ			சனி
பு சு			ரா

		ரா சனி	பு
	அம்சம்		
			சந்
சு சூ	குரு கே	ல/	செ

ஸ்ரீ பிங்கள ஹு தைமீ 1உ ஸ்திரவாரம் உத்திரட்டாதி நக்ஷத்திரம் கௌலவகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 5 நாழிகை 26 விநாடிக்கு கும்பலக்னத்தில் துலா நவாம்சை யில் ஸ்ரீ லோகரட்சகரான சூரியபகவான் லோக சுபீட்சார்த் தத்தை முன்னிட்டு தனுர் ராசியிலிருந்து மகர ராசி சங்கிரமண மாக தைமாதப் பிரவேசம் செய்தருளுகிறார். அன்று உத்தரா யண புண்ணிய காலமாகும். நிரஸாதிபதி சனி பகவானுகிறார்.

சங்கிரமணதேவதை இராட்சசி கங்காதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து விசித்திர ஆடையுடுத்தி சுவர்ண ஆபரணம் பூண்டு சந்தனம்பூசி சூர்ப்பத்தில் மாவு போஜனம் உண்டு கலப்பை ஆயுதம் ஏந்தி மகாபேரி வாத்தியம் முழங்க இரவிப்பியக்குடை யின்கீழ் வடக்குமுகதிருஷ்டியாக ஈசான்ய திக்கில் பயணம் செய்வாள். இத்தியாதியின் பலன் லோகத்தில் இரும்பு, ஈயம், எண்ணெய், நீலமணி இவற்றின் விருத்தி மிகும். இயந்திர ஆலைகளின் உபயோகப் பொருள்களின் உற்பத்தி மிகுதியாகி

வரும். சர்வேஸ்வரனுடைய அருளால் லோகத்தில் பிரஜா கோடிகளுக்கு நல்வினைப்பயனும் சிவபுண்ணியப் பலனும் அனுபோக பிராப்தியாகி நல்வாழ்வு ஏற்படும். உலகிலுள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் உள்ள திருவவதார மகான்களாகிய சிவஞான பரமாசாரியர்களின் வழியில் நின்று செயலாற்றுகின்ற உத்தமர்களின் தெய்வ கைங்கரியங்கள் சிவாலய புனித சேவைகள் நியமத்துடனும் பிரகாசமான ஆற்றலுடனும் சிறப்பாக நடந்துவரும். தேசங்களிலெங்கும் தேவாலயங்களில் தெய்வாராதனைகள் தேவதோத்ஸவங்கள் விமரிசையாக நடைபெற்று வரும். தெய்விகப் பேரவைகளில் குழுமியிருக்கின்ற சிவனடியார்கள் சிவாசாரியர்கள் பிரஸ்தாபிக்கின்ற சிவநெறி பிரசாரங்கள் லோகமெங்கும் பரவுவதாகும். லோக மக்கள் தெய்வ பக்தியுடனும் தத்துவ ஞானத்துடனும் விளங்குவர். தேசங்களில் ஆன்றோர்களால் பிரஜாசம்ரட்சணம் ஏற்பட்டு பிரஜைகள் அனைவரும் க்ஷேமத்துடன் வாழ்வார்கள்.

1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼
(சு. சே. சோ. லா. – லி. லு. லே. லோ – அ.)

மேஷ ராசி 9 பாதங்களும் சுப பலனை நடக்கும். குடும்பாபிவிருத்தியில் சுபிட்சம் நிலவும். தன வரவுகள் தானிய சேகரங்களில் நல்ல நிலைமையை ஏற்படுத்தும். சகோதரர்கள் சௌக்கிய மேன்மையில் இருந்துவருவார்கள். 14உ க்கு மேல் எல்லா விஷயங்களிலும் ஸ்லாக்கியமும் இலாப பிராப்தியும் ஏற்படும். லிகிதம் எழுத்துமூலிய காரியங்கள் உடனுக்குடன் பூர்த்தியாகும். புத்திரர் சௌக்கியம் தார சௌக்கியம் நன்றாக இருந்துவரும். செய்தொழிலில் அலுவல்கள் சுறுசுறுப்பாக நடைபெறும். செவ்வாய் புதன் சுபமாகும்.

2. ரிஷபம் – கார்த்திகை¾ – உரோகிணி – மிருகசீர்ஷம்½
(இ. ஊ. ஏ. – ஓ. வ. வி. வூ. – வே. வோ.)

ரிஷப ராசி 9 பாதங்களும் சுப பலனை நடந்து வரும். குடும்பாபிவிருத்தியில் சமயோசிதமான வருமானங்கள் வந்து கொண்டிருக்கும். வித்தியா வியாபாராதி கலைத் துறையில் மேன்மைஸ்திதியை அளிக்கும். சகோதரர் நலம் நன்றாக இருந்து வரும். கால்நடை வாகன சௌகரியம் திருப்தியளிக்கும். புத்திரர் பௌத்திரர்களின் நலன் மனவுவகையளிப்பதாக இருந்து வரும். தாம் பத்திய வாழ்க்கை தெய்வ பக்தியாக இனிது நடந்து வரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். புதன் வியாழன் சுபமாகும்.

3. மிதுனம்–மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾
(கா. கி. – கு. க. ங. ச்சா. – ஹே. ஹோ. ஹ)

மிதுனராசி 9 பாதங்களும் சுமாரான பலனைத் தரும். குடும்பாபிவிருத்தியில் அவசியமான தேவைகளுக்குப் பணம் வந்துகொண்டிருக்கும். போஜனாதி சௌகரியங்களில் குறைவின்றி பூரணத்துவமாக இருந்துவரும். சகோதரர் சகோதரிகளுக்கு சௌக்கிய பலனை ஏற்படுத்தும். வித்தியா வியாபாராதி கலைத்துறைகள் சிறப்புறும். எதிர்பார்த்த பொருளும் அரசாங்க சன்மானமும் அடைதலாகும். பூமி இயந்திர வகையில் முயற்சியினால் நற்பலன் ஏற்படும். தார புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். செய்தொழிலில் 28உ அளவில் நற்பலன் தரும். வெள்ளி சனி சுபமாகும்.

4. கடகம்– புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்
(ஹி. – ஹ. ஹே. ஹோ. ட. – டி. டு. டே. டோ.)

கடகராசி 9 பாதங்களும் சுமார் பலனாக நடந்து வரும். தன வரவுகள் கௌரவமான நிலைமையில் கணிசமாக வந்து கொண்டிருக்கும். அவ்விதம் பெரும் செலவையும் ஏற்படுத்தும். சகோதரருக்குப் பாக்கிய விருத்தியும் புகழும் உண்டாகும். வித்தியா வியாபாராதி கலைத்துறைகள் சிறப்புறும். பூமி இயந்திரங்களில் நற்பலன் ஏற்பட்டு வரும். புத்திரர் சௌக்கியம் சாதாரணமாக இருந்துவரும். மனைவிக்கு சிரோபாதை போன்ற நலிவு வந்து குணமாகும். ஞாயிற்றுக் கிழமையில் சூரியார்ச்சனை செய்ய நலம் தரும். செய்தொழில்கள் புகழாக நடந்துவரும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼
(ம. மி. மு. மே. – மோ. ட. டி. டு. – டே.)

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பண வருவாயில் மாத முற்பகுதியில் சீரான நிலைமையாயினும் 14உ அளவில் கணிசமான ஆதாயம் தரும். எல்லா விஷயங்களிலும் திருப்தியான நன்மைகள் ஏற்படும். சகோதரருக்கு இருமல் போன்ற நலிவு வந்து குணமாகும். பிதுரார்ஜ்ஜித சொத்தில் 28உ அளவில் நற்பலன் ஏற்படும். தாம்பத்திய வாழ்வு சுமுகமாக நடந்துவரும் இம்மாதம் ஆண் பிண்டம் தரிக்கும். வழக்கு விவகாரத்தில் ஜெய பிராப்தியாகும். செய் தொழிலில் அலுவல்கள் வெற்றிகரமாக நடந்துவரும். புதன் வியாழன் சுபமாகும்.

6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

(டோ. பா. பி. – பு. ஷ. ண. ட. – பே. போ.)

கன்னியாராசி 9 பாதங்களும் சுமார் பலனுக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் தன வரவுகள் வந்துகொண்டிருக்கும். சகோதரர்கள் சௌக்கியமாக இருந்து வருவார்கள். வித்தியா வியாபாராதிகலைத்துறையில்ஸ்லாக்கியமானபலனை ஏற்படுத்தும். பந்து அம்மான்களின் அனுசரணை பலம் இருந்தவரும். இருப்பினும் மாதப் பின்பகுதியில் ஓர் சர்ச்சைவந்து நீங்கும். 14உக்கு மேல் அஜீரணம் ஏற்பட்டுக் குணமாகும். ஞாயிற்றுக்கிழமையில் சூரியார்ச்சனை செய்ய நலமாகும். தாம்பத்திய வாழ்க்கை சாதாரணமாக நடந்துவரும். செய்தொழிலில் கடமைப்பணி நன்ருக நடந்துகொண்டிருக்கும். வெள்ளி சனி சுபமாகும்.

7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

(ர. ரி. – ரு. ரே. ரோ. தா. – தி. து. தே.)

துலாராசி 9 பாதங்களும் சுமார் பலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பண வரவுகள் மதிப்புடன் வந்துகொண்டிருக்கும். சகோதரர் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். வீடு வாகனுதிகளின் பிராப்தியில் விருத்தியை உண்டுபண்ணும். பூமியில் ஓரளவு பலன்வரும். வித்துவத்துவம் கலைத்துறையில் உயர்வும், வெகுமதியும் கிடைக்கும். புத்திரர் பௌத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். மனைவிக்கு மனக்குறை வருவதும் உடன் சரி செய்வதும் ஆகும். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு அருச்சனை செய்ய நலம்தரும். செய்தொழில்கள் சாதாரணமாகநடந்துவரும் திங்கள் செவ்வாய் சுபமாகும்.

8. விருச்சிகம் – விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை.

(தோ. – ந. நி. நு. நெ. – நோ. ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் சுப பலனுக நடக்கும். குடும்ப நலம் நன்ருக இருந்துவரும் தனவரவு தானிய விருத்தியில் நல்ல நிலைமையாக இருந்துவரும். சகோதரருக்கு சிறு சிறு பூசல்களுக்கிடையே சுபம் ஏற்படும். இயந்திர சாதனங்களின் விருத்தி பலன் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். கிரியா மேன்மையையும் அந்தஸ்து உயர்வையும் ஏற்படுத்தும். தாரபுத்திரர்களின் சௌகரியம் நன்ருக இருந்து வரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் அலுவல்கள் நிதான போக்காகவும் திறம்படவும் நடந்துவரும். புதன் வியாழன் சுபமாகும்.

9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

(யே. யோ. பா. பி. - பு. த. ப. ட. - பே.)

தனுர் ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணம் வரவும் செலவும் சம அளவில் இருந்துவரும். சகோதரருக்கு மனக்குறை வருவதும் உடன்சரிபடுவதும் ஆகும். 14தேதிக்குமேல் வித்துவத்துவத்தில் எழுத்துமூலியகாரியங்களில் விசேஷ பலன் ஏற்படும். புத்திரரின் நிலைமையில் மனேவாட்டமாக இருந்துவரும். இராசிக்கு ஓர் விபத்து சம்பவிக்கும். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு அருச்சனை செய்ய நலம்தரும். தாம்பத்திய வாழ்வு தெய்வ பக்தியாக நடந்துவரும். செய்தொழிலில் செலவுடன்கூடிய நன்மையை ஏற்படுத்தும். சனி, ஞாயிறு சுபமாகும்.

10. மகரம் - உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

(போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி.)

மகர ராசி 9 பாதங்களும் சுமாரானபலனைத்தரும். குடும்பாபி விருத்தியில் பண வரவுகள் சீராக இருந்துவரும். சகோதரருக்கு மாதப் பின்பகுதியில் ஓர் நற்பலன் ஏற்படும். வித்தியா வியாபாராதிகளில் போட்டியிருப்பினும் நற்பலன் வரும். பூமி இயந்திரங்களில் வழக்குகள் ஏற்படும். அரிய காரியங்களின் முயற்சியில் நன்மையையே ஏற்படுத்தி வரும். புத்திரர் பௌத்திரர்களுக்கு சௌக்கியம் தரும். கணவன் மனைவியரிடையே சற்றே மனேவேகம் வந்து தணியும். செய்தொழில்கள் புத்தி சாதுரியமாக நடந்து வரும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

11. கும்பம் - அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

(கு. கே. - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. தா.)

கும்ப ராசி 9 பாதங்களும் சுபபலன் தரும் குடும்பசௌகரியம் நன்ருக இருந்துவரும். தனவரவு தானிய சேகரங்களில் நல்ல நிலைமையை ஏற்படுத்தும். சகோதரர் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். குலதெய்வ பூசைபோடுதல் பங்காளிகள் கூடுதல் ஆகிய மகிழ்ச்சி சம்பவங்கள் ஏற்படும். புத்திரர் புத்திரிகளுக்கு சௌக்கிய பலன் தரும். வழக்கு விவகாரங்களில் ஜெயம் ஏற்படும். மனைவி சம்பந்தமாக அவசிய செலவுகளைச் செய்விக்கும். செய்தொழிலில் அலுவல்கள் காலத்தில் நன்ருக நடந்துவரும். செவ்வாய் புதன் சுபமாகும்.

12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி.

(தி. து. ஸ. ச. த. – தே. தோ. ச.சி.)

மீனராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். குடும்பாபிவிருத்தியில் பல விதத்தில் தன ஆதாயங்களை ஏற்படுத்திவரும். வஸ்திராபரணங்களின் சேர்க்கையைத்தரும். விளைபூமியில் முன்பிருந்த இருணம்தீருமளவிற்குப்பலன்தரும் வித்தியாவியாபாராதி கலைத்துறைகளில் மேன்மை ஸ்திதியாக இருந்துவரும். புத்திரனின் ஜீவனோபாயங்களின் முயற்சியில் நன்மை ஏற்படும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். இம்மாதம் பெண் மகவு ஒன்று உண்டாகும். செய்தொழிலில் மேலிடத்திய அனுகூலங்கள் இருந்துவரும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

"ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்"

(மாதப் பத்திரிகை)

- கடந்த 57 ஆண்டுகளாக-தமிழகத்தின் சமய வளர்ச்சிக்காக-ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனின் சார்பாகத் தமிழில்வெளிவருகிறது.
- மகான்களின் வாழ்க்கையில் நடைபெற்ற சுவையான நிகழ்ச்சிகள், அன்றாடவாழ்க்கையில் மதத்தைக்கைக்கொள்ள வேண்டிய வழிமுறைகள், சாஸ்திரங்களின் உட்பொருள் விளக்கங்கள், ஆத்ம தத்துவம் குறித்த ஆராய்ச்சி, உபநிஷத உண்மைகள், இதிகாசங்கள், பக்தி, வேதாந்தம், சைவ சமயக் கருத்துக்களைக்கொண்டது.
- ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் குரலாக விளங்கி மத உண்மைகளைப் புகட்டுகிறது. உங்கள் உள்ளம் உயர, நீங்கள் ஹிந்து மதத்தை உள்ளபடியே புரிந்துகொள்ள அவசியம் படிக்கவேண்டிய பத்திரிகை இது.

சந்தா விபரம்

வருட சந்தா : ரூ. 7-00 ... ஆயுள் சந்தா : ரூ. 100-00

ஆயுள் சந்தாவைப் பகுதி பகுதியாகவோ, மாதம் ரூ. 10 ஆகவோ, மொத்தமாகவோ பின்வரும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

இராமகிருஷ்ண விஜயம் காரியாலயம்,
ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,
மயிலாப்பூர், சென்னை - 600004.

உ

குருபாதம்

தருமையாதீனம்

"ஞானசம்பந்தம் பதிப்பகம்"

புத்தக விலைப் பட்டியல்

சைவமும் தமிழும் தழைத்தினிதோங்கப் பணிபல புரிந்து வரும் தருமையாதீனம் இந்நாள்வரை தமிழ், ஆங்கிலம், சம்ஸ்கிருதம் முதலிய மொழிகளில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த 712 நூல்களை வெளியிட்டுள்ளது. இவ்வரிய நூல்களை அன்பர்கள் பலரும் பெற்றுப் பயன் அடைந்து வருகின்றனர்.

தருமையாதீன வெளியீடுகளில் தற்போது சில நூல்களே கைவசம் உள்ளன. அவற்றிற்குரிய விலை விபரம் இவ்விலைப் பட்டியலில் குறிக்கப்பெற்றுள்ளன.

சமயம், சாத்திரம், திருமுறை, இலக்கியம், ஆகமம் போன்ற பல்வேறு துறையைச் சேர்ந்த இவ்வரிய நூல்களை மீண்டும் மீண்டும் பதிப்பித்து வழங்கவும், புதிய நூல்கள் பலவற்றைக் குறைந்த விலையில் வெளியிட்டு உதவவும் திருவுளங்கொண்ட இத்தருமையாதீனம் இருபத்தாறுவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருப்பெயரால் "ஞானசம்பந்தம் பதிப்பகம்" என்ற அறக்கட்டளையை நிறுவி யருளியுள்ளார்கள்.

பட்டியலில்கண்ட நூல்களின் விற்பனைத்தொகை அனைத்தும் "ஞானசம்பந்தம் பதிப்பகத்தையே" சாரும். இத்தொகை பல் வேறு துறைகளில் உள்ள நூல்களைப் பதிப்பித்து வெளியிடப் பயன்படுத்தப்பெறும்.

ரூபாய் ஐம்பதுக்கு மேற்பட்ட மதிப்புடைய நூல்களை, ஒரே நேரத்தில் வாங்குபவர்களுக்கு 15 சதம் கழிவும், புத்தக விற்பனையாளர்களுக்கு 20 சதம் கழிவும்வழங்கப்படும். வேண்டிய நூல்களுக்கு உரிய தொகையைப் பணவிடை (M. O) உண்டியல் (draft) மூலம் அனுப்பி நூல்களைப் பெறலாம். V. P. P. வழி நூல்கள் அனுப்ப இயலாது. தபால் செலவுகள் தனி.

இவ்வரிய வாய்ப்பினை அன்பர்கள் பயன் படுத்திக்கொள்ள வேண்டுகின்றோம்.

செயலாளர்,

ஞானசம்பந்தம் பதிப்பகம்,

தருமையாதீனம்–மாயூரம் 609001–தஞ்சை மாவட்டம்.

1. திருமுறைகள்

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

எட்டாம் திருமுறை திருவாசகம் - திருக்கோவையார் (குறிப்புரையுடன்)	ரூ.	9—00
திருவாசகம் மூலம்	...	1—50

திருமாளிகைத்தேவர் முதலியோர் அருளிய

ஒன்பதாந் திருமுறை திருவிசைப்பா - திருப்பல்லாண்டு (குறிப்புரையுடன்)		5—50

திருமூலர் அருளிய

பத்தாந் திருமுறை (முதல் மூன்று தந்திரங்கள்)		15—00

2. தோத்திரநூல்கள்

அகத்தியர் தேவாரத் திரட்டு	...	0—75
குருஞானசம்பந்தர் அட்டகம்	...	1—00
திருவருட்பாத் திரட்டு	...	1—00
திருத்தொண்டர் திருவந்தாதி	...	0—50
ஆளுடையபிள்ளையார் மும்மணிக்கோவை	...	0—25
ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி	...	0—50
கோயில் நான்மணிமாலை	...	0—25
திருக்கழுமல மும்மணிக்கோவை	...	0—25
திருக்கயிலாய ஞான உலா	...	0—30
கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி	...	0—25
பொன் வண்ணத் தந்தாதி	...	0—25
தென்கயிலை வடகயிலைத் திருப்பதிகங்கள்	...	0—50
திருவாலவாய்த் தோத்திரத்திரட்டு	...	0—25
மதுரைத் திருப்பதிகங்கள் (தலவரலாற்றுடன்)		2—00
விநாயகர் அகவல் (தெளிவுரையுடன்)	...	0—75
அபிராமி அந்தாதி (மூலம்)	...	0—25
கந்தர்கலிவெண்பா (மூலம்)	...	0—35
தட்சிணாமூர்த்தி திருவருட்பா	...	0—20
சிகாரத்தினமாலை (உரையுடன்)	...	0—65
நடராசசதகம் (குறிப்புரையுடன்)	...	1—35
சொக்கநாத வெண்பா (குறிப்புரையுடன்)	...	0—75

3. சாத்திர நூல்கள்

சிவஞானபோதம் (தெளிபொருளுடன்)	... ரூ.	0—50
சிவப்பிரகாசம் (உரை நடையுடன்)	...	0—75
சித்தாந்த நூல்கள் 6 (உரை நடையுடன்)	...	0—50
திருவுந்தியாரும் இருபா இருபஃதும் (உரை நடையுடன்)		0—25
சங்கற்ப நிராகரணம் (உரை நடையுடன்)	...	0—50
சித்தாந்த அட்டகம்	...	1—00
உண்மை விளக்கம் (உரை நடையுடன்)	...	0—40
சங்கற்பநிராகரணம் (ஆங்கிலம்)	...	3—50
இருபாஇருபஃது (விளக்கவுரை- ஆங்கிலமொழிபெயர்ப்பு)		1—10
சிவபோகசாரம் (உரையுடன்)	...	2—25
ஞானாவரண விளக்கமும் மாபாடியமும் (2 பாகம்)		10—00
செந்தமிழ்ப் பூம்பொழில் (2 ஆம் தொகுதி)	...	1—75
,, (3 ஆம் தொகுதி)	...	1—00
,, (4 ஆம் தொகுதி)	...	2—75
,, (5 ஆம் தொகுதி)	...	3—50
உமாபதி சிவாசாரியார் - திருநூல் ஐந்து	...	0—50
சந்தானாசாரியர்புராணம் (குறிப்புரை- உரை நடையுடன்)		0—50
பிராசாத நான்மணிகள் (உரையுடன்)	...	0—50
சிவக்ஷேத்திர சிவநாமக் கலிவெண்பா	...	0—50
The Development of Saivism in South India	...	2—00
Saiva - Siddhanda	...	1—00
பிரம்ம சூத்திரம்	...	1—15
திருவருட்பயன் (விளக்கவுரையுடன்)	...	2—50
சித்தாந்த வினாவிடை	...	8—00
சித்தாந்தத் தெளிவியல்	...	3—50
திருவருட் செய்தி	...	5—50
ஸ்ரீ புவனாம்பிகை கலைக்ஞான தீபம்	...	1—25

4. இலக்கியம்

காசிக் கலம்பகம் (குறிப்புரையுடன்)	...	0—25
திருக்குறள் - அறத்துப்பால் (பரிமேலழகர் உரையுடன்)		1—50
சச்சபுடவெண்பா (குறிப்புரையுடன்)	...	0—50

கந்தபுராணச் சுருக்கம்	...	ரூ. 2—00
கந்தபுராணத் திரட்டு	...	2—00
மண் சுமந்த திருவிளையாடல்	...	0—30
தண்டலையார் சதகம் (குறிப்புரையுடன்)	...	0—50
கிளிவிடு தூது	...	0—25
திருவருட்டுறைப் புராணம்	...	1—50
கந்தக் கடவுள் வாழ்த்தும் வரலாறும்	...	0—25
சேக்கிழார் நாயனர் புராணம்	...	0—25
நால்வர் நான்மணி மாலை உரையுடன்	...	(—50
தருமையாதீனமும் தாயுமானவர் திருக்கோயிலும்		0—75
ஆசாரக்கோவை (குறிப்புரையுடன்)	...	0—75

5. சமய மரபு நூல்கள்

Sri Gurugnanasambandar of Dharmapuram	...	1—00
குருவழிபாடு	...	1—00
சைவ நுட்டான அகவல் - சிவபூஜை அகவல்	...	0—50
சிவபூஜா விதி	...	1—25
புட்ப விதி	...	0—25
புட்ப பலன் (குறிப்புரையுடன்)	...	0—75
சைவனுஷ்டான விதியும் - அனுஷ்டான அகவலும்		0—45
நித்திய கன்மநெறி (பொழிப்புரையுடன்)	...	1—50
இந்துமத பாலபாடம்	...	1—25
நவக்கிரக மாண்பு	...	0—60
சித்தாந்தக்கட்டளை	...	0—60

6. யாத்திரை நூல்கள்

திருக்கயிலாய யாத்திரை	...	5—00
அமரநாதம்	...	3—00
பசுபதிநாதம்	...	3—00
ஜோதிர்லிங்கத் தலங்கள்	...	1—50

7. விழா மலர்களும் பிற நூல்களும்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் கனகாபிஷேக விழா மலர்		5—00
புள்ளிருக்குவேளூர் மகாகும்பாபிஷேக மலர்	...	14—00

திருவையாறு மகாகும்பாபிஷேக மலர்	...ரூ.	5—00
ஞானசம்பந்தம் வெள்ளிவிழா மலர்	...	1—00
திருவாரூர் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜை விழா மலர் (சைவசித்தாந்த வினுவிடை)	...	2—00
திருபுவனம் மகா கும்பாபிஷேக மலர்	...	3—00
ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி நினைவு மலர்	...	4—50
பரமாணுப் புராணம்.	...	1—25

8. *திருப்பதிகங்கள்

(காவிரி வடகரைத் தலங்கள்)

1	சிதம்பரம் திருப்பதிகங்கள்	...	1—50
2	திருநாரையூர்த் திருப்பதிகங்கள்	...	0—35
3	திருவேட்களத் திருப்பதிகம்	...	0—35
4	திருநெல்வாயில் திருப்பதிகம்	...	0—25
5	திருக்கழிப்பாலைத் திருப்பதிகங்கள்	...	0—40
6	ஆச்சாள்புரத் திருப்பதிகங்கள்	...	0—30
7	திருமயேந்திரப்பள்ளித் திருப்பதிகங்கள்	...	0—30
8	தென் திருமுல்லைவாயில் திருப்பதிகம்	...	0—30
9	திருக்கலிக்காமூர்த் திருப்பதிகம்	...	0—25
10	திருச்சாய்க்காடு – திருப்பல்லவனீச்சரத் திருப்பதிகங்கள்	...	0—80
11	திருவெண்காடு – கீழைத்திருக்காட்டுப்பள்ளித் திருப்பதிகங்கள்	...	0—80
12	திருக்குருகாவூர் – திருக்கோலக்காத் திருப்பதிகங்கள்	...	0—50
13	சீகாழித் திருப்பதிகங்கள்	...	2—25
14	திருப்புள்ளிருக்குவேளூர்த் திருப்பதிகங்கள்	...	0—50
15	திருக்கண்ணார்கோயில் – திருக்கடைமுடித் திருப்பதிகங்கள்	...	0—40
16	திருநின்றியூர்த் திருப்பதிகங்கள்	...	0—50

*தேவாரப் பாடல்பெற்ற சிவதல யாத்திரை புரிவோர் அவ்வத்தலங்களின் வரலாறுகளை அறிதற்கும் தலத் திருப்பதிகங்களைப் பொருளுணர்ந்து பாராயணம் செய்வதற்கும் இந்நூல்கள் மிக்க உதவியாக இருக்கும்.

17 திருப்புன்கூர் - திருநீடூர்த் திருப்பதிகங்கள் ...ரூ 0—75
18 திருஅன்னியூர் -
திருவேள்விக்குடித் திருப்பதிகங்கள் ... 0—65
19 திருமணஞ்சேரி -
திருவெதிர்கொள்பாடித் திருப்பதிகங்கள் ... 0—50
20 திருக்குறுக்கைவீரட்டத் திருப்பதிகங்கள் ... 0—40
21 திருக்கருப்பறியலூர் -
திருக்குரக்குக்காத் திருப்பதிகங்கள் ... 0—50
22 திருவாழ்கொளிபுத்தூர் -
திருப்பழமண்ணிப்படிக்கரைத் திருப்பதிகங்கள் 0—60
23 திருஓமாப்புலியூர் -
திருக்கானாட்டுமுள்ளூர்த் திருப்பதிகங்கள் ... 0—60
24 திருக்கடம்பூர்த் திருப்பதிகங்கள் ... 0—40
25 திருப்பந்தணைநல்லூர் -
திருக்கஞ்சனூர்த் திருப்பதிகங்கள் ... 0—40
26 திருக்கோடிகா - திருமங்கலக்குடித் திருப்பதிகங்கள் 0—55
27 திருப்பனந்தாள் - திருஆப்பாடி -
திருச்சேய்ஞலூர்த் திருப்பதிகங்கள் ... 0—40
28 திருந்துதேவன்குடி - திருவியலூர்த் திருப்பதிகங்கள் 0—40
29 திருக்கொட்டையூர்-திருவின்னம்பர்த் திருப்பதிகங்கள் 0—50
30 திருப்புறம்பயம் - திருவிசயமங்கை -
திருவைகாவூர்த் திருப்பதிகங்கள் ... 0—60
31 திருவடகுரங்காடுதுறை-திருப்பழனத்திருப்பதிகங்கள் 0—65
32 திருவையாறு - திருநெய்த்தானம் -
திருப்பெரும்புலியூர்த் திருப்பதிகங்கள் ... 1—50
33 திருமழபாடி - திருப்பழுவூர்த் திருப்பதிகங்கள் ... 0—70
34 திருக்கானூர்த் திருப்பதிகம் ... 0—40
35 திருஅன்பிலாலந்துறை -
திருமாந்துறைத் திருப்பதிகங்கள் ... 0—45
36 திருப்பாற்றுறை - திருஆனைக்காத் திருப்பதிகங்கள் 0—75
37 திருப்பைஞ்ஞீலி -
திருப்பாச்சிலாச்சிராமத் திருப்பதிகங்கள் ... 0—60